வார மலர்
மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM දේසියම්

நீங்களும்
செய்தியாளர்
ஆகலாம்

செய்திகள்,
சம்பவங்கள்,
நிகழ்வுகளை
எமக்கு அனுப்பி
வையுங்கள்



thesiyamnews@gmail.com

குரல்: 03 | பங்குனி மாதம் 05.04.2023 புதன்கிழமை | பக்கங்கள்: 14



# இந்தியா செல்லும் ரணில்?
# மீண்டும் ‘13’ பேசுபொருளாகும்

## ஏமாற்றும் ‘நம்பிக்கையாளர்களும்’ ஏமாற்றப்படும் ‘தமிழர்களும்’

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தவாரம் இந்தியாவுக்கு பயணமாகவுள்ளதாக செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பில் 13 ஆவது திருத்த சட்டம் தொடர்பில் பேசுவார் எனவும் ஆங்காங்கே தகவல்கள் வெளியாகிவருகின்றன.இது வழமையான செய்தியே.கடந்த காலங்களிலும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அரச தரப்பு பிரதிநிதிகள் செல்லும் வேளையிலும் அதேபோல்,இந்திய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தரும்பொழுதும் இந்த ‘13’ விவகாரம் பேசுபொருளாக அமைவது வழமையே.

பக்கம் 02

# பிரபாகரனின் பெயரை வணிகமாக்கப் பார்க்கிறார்கள்



ராஜபக்ச குடும்பத்திற்கு எதிரான சிங்கள மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் போன்ற ஒரு தலைவர் அந்த இடத்தில் வந்திருந்தால், ஒட்டுமொத்த சிங்கள மக்களும் சேர்ந்து அவரை வரவேற்றிருப்பார்கள், கொண்டாடியிருப்பார்கள். அவர் தமிழீழத்திற்கான தலைவராக மட்டுமல்லாது, ஒட்டுமொத்த இலங்கைக்குமான ஒரு தலைவராக உயர்ந்திருக்க முடியும் என்கிறார் புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத் தலைவர் டொக்டர் கே. கிருஷ்ணசாமி.

பக்கம் 02

## வெடுக்குநாறிமலை விவகாரம்
# புத்தாண்டின் பின் தீர்வு
## ரணில் அறிவிப்பு

வவுனியா - வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய பிரச்சினைக்கு புத்தாண்டின் பின் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் உறுதியளித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதி சிவன் விக்கிரகம் இனந்தெறியாத நபர்களால் கடந்த மாதம் தகர்தெறியப்பட்டது. இது தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற

பக்கம் 02

# இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள்

## குற்றவியல் நீதிப்பொறிமுறையை நிறுவுவது அவசியம்; புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் வலியுறுத்தல்

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை முன்னிறுத்தி சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையை நிறுவுவதன் அவசியம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கான சர்வதேச நாடுகளின் தூதுவர்களிடம் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமான நிலையில், முடிவடைந்திருக்கிறது.

அந்தவகையில் பிரித்தானிய தமிழர் பேரவை, அமெரிக்க தமிழர் நடவடிக்கைக்குழு மற்றும் சுவிஸ்லாந்து தமிழர்

பக்கம் 02

## ஊர்காவற்றுறை தம்பாட்டியில்
# கடற்படை முகாமுக்கு காணி சுவீகரிப்பு



ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் கடற்படை முகாமுக்கு காணி சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அப்பகுதி மக்களின் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது.

தம்பாட்டிப் பகுதியில் கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக அமைக்க காணி சுவீகரிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று செவ்வாய்க்கிழமை அப்பகுதி மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாரந்தனை வடக்கு ஜே/56 தம்பாட்டியில் உள்ள இறங்கு துறையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக காணி சுவீகரிக்கும் நோக்கில் குறித்த இரகசிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோதும் இதனை

பக்கம் 02

# நாட்டுக்கு சிவ தோஷம்

## குல நாசம் ஏற்படும் என்கிறார் சிறீதரன்



'சிவ தோஷம் என்பது குல நாசம்' என்ற பழமொழிக்கு அமைய இந்த நாடு அழிவை நோக்கி செல்லவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் அமர்வில் உரையாற்றிய சிறீதரன், சிவன் மீது கைவைக்கப்பட்டுள்ளமை பேராபத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார். சைவ தமிழர்கள் சிவன் வணக்கத்தை மிகவும் கண்டிப்பாகவும், கரிசனையோடும் மேற்கொண்டு வருவதாகவும் சிறீதரன் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே நாடு மிகவும் மோசமான நிலைக்கு சென்றிருந்ததுடன், அரசாங்கத்தின் மனங்களில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்பொழுது சர்வதேச நாடுகள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே ஒரு இனத்தின் அடிப்படை வணக்க முறைகளை சிதைத்தெறியும் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

# வட, கிழக்கில் இருக்கின்ற நீதிமன்றங்களில்

## தீர்ப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை

வடக்கு, கிழக்கில் இருக்கின்ற நீதிமன்றங்களில் தீர்ப்புகள் மதிக்கப்படுவதில்லை எனவும் நீதிபதிகளின் கட்டளைகள் செல்லாக் காசாக மாற்றப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வில் உரையாற்றிய சிறீதரன், இலங்கையில் நீதித்துறை முடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தென்பகுதியில் இருக்கின்ற நீதிமன்றங்களின் தீர்ப்புகளே மதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டில் இருக்கின்ற நீதிமன்றங்கள் அனைத்துக்கும் ஒரே நீதியும் ஒரே சட்டமும் இருந்திருந்தால், முல்லைத்தீவு நீதிபதி பிறப்பித்திருந்த உத்தரவுக்கு அமைய குருந்தூர் மலையில் இடம்பெற்றிருந்த சம்பவத்தை தடுத்திருக்க முடியும் என்றும் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை எனவும் இதுபோன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## வெடுக்குநாறிமலை விவகாரம்

**நிலையில், பாராளுமன்றத்திலும் பேசுபொருளாகியுள்ளது.**

**இந்நிலையில் அமைச்சர்களான ஜீவன் தொண்டமான் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று அது தொடர்பில் அவதானம் செலுத்தியிருந்தனர். அத்தோடு இவ்விடயம் தொடர்பில் இவ்வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சரிடம் தெளிவுபடுத்தியுள்ளனர்.**

**இந்நிலையிலேயே நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**அவர் மேலும் குறிப்பிடுகையில்,**

**வவுனியா - வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பிரச்சனை தொடர்பில் அமைச்சர்களான ஜீவன் தொண்டமான் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இவ்வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தெளிவுபடுத்தினர்.**

**இப்பிரச்சினைக்கு புத்தாண்டின் பின்னர் தீர்வினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். அத்தோடு இவ்விவகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்மையையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் என்றார்.**

## ஊர்காவற்றுறை தம்பாட்டியில்

*அறிந்த அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*காணியை அளந்து கடற்படையினருக்கு வழங்குவதற்காக அங்கு சென்ற நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.*

*இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த கடற்படையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை புகைப்படமெடுத்ததை அவதானிக்க முடிந்தது.*

## இந்தியா செல்லும் ரணில்?

**ஆனால், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விஜயம் என்பது இலங்கை கடந்த சில வருடங்களாக எதிர்கொண்டிருந்த பொருளாதார நலிவு நிலையின் போது இந்தியா இலங்கைக்கு கொடுத்த ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு விஜயமாகவும் ஐ.எம்.எப் கடன் இலங்கைக்கு கிடைப்பதற்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு விஜயமாகவும், அத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்புகளுக்கு இலங்கையில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு இடம்கொடுக்கும் சில திட்டங்களுடனேயே ரணில் விக்ரமசிங்க பயணிக்கவுள்ளதாக அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது. இதில் 13 ஐ இலங்கையில் அமுல்படுத்தினால் சிங்கள இனவாதிகள் எவ்வாறு கொந்தளிப்பார்கள் என்பதை ரணில் விக்ரமசிங்க எடுத்துரைப்பாரே தவிர நிச்சயமாக அதனை அமுல்படுத்துவது சம்பந்தமாகவோ அல்லது அதனை அமுல்படுத்திதான் ஆகவேண்டுமென்று இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதாகவோ இந்த சந்திப்பு அமையப்போவதில்லை.**



**கடந்த வருடம் சில தமிழ் தலைமைகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு 13 தொடர்பில் ஒரு கூட்டு அறிக்கையை அனுப்பியிருந்தன. ஆனால், அந்த விவகாரம் அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது. அனுப்பியவர்களும் மௌனமாகிவிட்டார்கள். வாங்கியவர்களும் மௌனமாகி விட்டார்கள். இது வரை அந்த கடிதத்துக்கான பதில் இல்லை. இவ்வாறு தான் தமிழரின் விவகாரம் இந்தியாவால் கையாளப்படுகிறது. ஆகவே, 13 தொடர்பில் இந்தியாவிடம் இலங்கை ஜனாதிபதி பேசுவார் இல்லை இந்தியா பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் பேசுவார் என்று பேசுவதை விடுத்து தமிழ் தலைமைகள் தமிழருக்கான தீர்வு விடயத்தில் மாற்று சிந்தனைகளை உள்வாங்கி மாற்று திட்டங்களை வகுத்து செயற்படுவதே காலத்தின் தேவை. அதற்கு நிச்சயமாக தமிழ் தலைமைகளுக்கிடையில் ஒற்றுமை தேவை. அதைவிட தீர்வு விடயத்தில் ஒருமித்த கருத்து தலைமைகளிடத்தில் வெளிப்படவேண்டும். அதற்கு தமிழ் மக்களின் தீர்ப்புகளும் செயற்பாடுகளும் வழிவகுக்கக்கூடும்.**

# நாட்டில் இனப்பிரச்சினை இல்லை:

## தமிழ் அரசியல்வாதிகள் மீது சரத் வீரசேகர குற்றச்சாட்டு!



நாட்டில் இனப்பிரச்சினை என்பதொன்று கிடையாது எனவும் தமிழ் அரசியல்வாதிகளே இனப்பிரச்சினை என்று குறிப்பிட்டுக்கொண்டு சிங்களவர்களை இனப்படுகொலையாளர்கள் என சித்தரிக்கிறார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர, பௌத்த மத மரபுரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேரவாத பௌத்த கொள்கையை பாதுகாக்கும் ஒரு நாடாக இலங்கை உள்ளது, ஆகவே பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்டு. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இனவாத முரண்பாடுகளை தமிழ் அரசியல்வாதிகளே தோற்றுவிக்கிறார்கள். நாட்டில் இனப்பிரச்சினை உள்ளது என ஜனாதிபதி குறிப்பிடுகிறார், ஆனால் நாட்டில் இனப்பிரச்சினை என்பதொன்று ஏதும் இல்லை.

தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவே யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் விடுதலை புலிகள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எவ்வித இனபடுகொலையும் இடம்பெறவில்லை என்பதை சர்வதேச நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். சிங்களவர்கள் இனபடுகொலையாளிகள் என்று பறைசாற்றுவதை தமிழ் அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல் கைதியின் சகோதரி காலமானார்!



கிளிநொச்சியை சேர்ந்த செல்லையா நவரத்தினம் என்பவரின் சகோதரி, இரத்தினம் ராசலெட்சுமி, (04) காலமாகிவிட்டார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் காலமான அம்மையாரின் இறுதிக் கிரியைகள், பளையில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகிறது.

20 வருட கடூழிய சிறை தண்டணை அளிக்கப்பட்ட நிலையில், கடந்த 14 ஆண்டுகளாக சிறை அனுபவித்துவருகின்ற முதியவரான செ.நவரத்தினம், சிறை அதிகாரிகளின் பாதுகாப்புடன் தனது மூத்த சகோதரியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வார்.

அதற்கான முன்னாயத்தப் பணிகளை 'குரலற்றவர்களின் குரல் அமைப்பு' மேற்கொண்டு வருகிறது.

## இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள்

**நடவடிக்கைக்குழு ஆகிய புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கான சர்வதேச நாடுகளின் தூதுவர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வாரஇறுதியில் நடைபெற்றது.**

**இதன்போது இலங்கை தொடர்பான போர்க்குற்ற விசாரணைகள், மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிரான தடைவிதிப்பு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடுவதற்கான சாத்தியப்பாடு, அரசியல் தீர்வு ஆகிய விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.**

**அதேபோன்று இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வை வழங்குதல் மற்றும் இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை முன்னிறுத்தி சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையை நோக்கி நகர்தல் ஆகியவற்றின் அவசியம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.**

## பிரபாகரனின் பெயரை

*அந்த தருணத்தில் பிரபாகரனை கொண்டு வந்து நிறுத்தியிருந்தால், சிங்கள மக்கள் கூட பிரபாகரனது தலைமையில் அந்தப் போராட்டத்தை நடத்துவதற்கான வாய்ப்பு இருந்ததாக அவர் கூறுகிறார்.*

*இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் மேற்கண்டவாறு கூறிய அவர், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் கூறிய கூற்று தொடர்பில் கடும் ஆட்சேபனை வெளியிட்டுள்ளார்.*

*அவர் ஒரு மகத்தான தலைவர். பிரபாகரனின் பெயரை வரலாற்றிலிருந்து ஒருபோதும் நீக்க முடியாது. ஆனால், அப்படியான மகத்தான தலைவரின் பெயரை செல்லுகின்ற பொழுது, அதிக கவனம் தேவை.*

*அண்மைக்காலமாக தமிழ்நாட்டில் சில அமைப்புக்கள் விடுதலைப் புலிகளின் அமைப்பு, பிரபாகரனின் பெயரை வணிகமாக்கப் பார்க்கிறார்கள். இதனை ஆழ்ந்த வருத்ததுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அவ்வாறான மலிவான அரசிலுக்கு பிரபாகரனது பெயரை பயன்படுத்தக்கூடாது. அவருடைய பெயரை வைத்து அரசியல் செய்வதோ? வணிகம் செய்வதோ? எந்த விதத்திலும் முறையானது அல்ல.*

*அது உலகெங்கும் வாழக்கூடிய ஈழத்தமிழ் மக்களுக்கு துரோகம் செய்வதற்கு சமமானது எனக் கூறியுள்ளார்.*

தேசியம்
ஆசிரியர் பீடம்

இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# ‘மக்கள் எழுச்சி’ சாத்தியமா?

தமிழர் தேசத்தின் மீதான அத்துமீறல்கள் ,அடாவடிகள் நாளுக்கு நாள் –நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.ராஜபக்ச காலத்தையும் விட அதிகமான சம்பவங்கள் தமிழர் தேசத்துக்கு எதிராக அரங்கேற்றப்படுகின்றன.ஆனால்,இதுவரை காலமும் தமிழருக்கு அரணாக இருப்போம் என்று கூறிவந்த இந்தியாவோ அல்லது சர்வதேச சமூகமோ இந்த விவகாரம் தொடர்பில் இதுவரை எந்தவொரு அழுத்தத்தையோ அல்லது வளமை போன்று அறிக்கையையோ வெளியிட்டதாக இல்லை.தமிழ் தலைமைகள் கூட வெள்ளம் கழுத்தை நெருங்கிய வேளையில் தான் வளமை போன்று ஒன்றுகூடல்களை நடத்தியதுடன்,ஊடக அறிக்கைகளை வெளியிட்ட அதேவேளை, வீராவேச பேச்சுக்களையும் பேசியதை அவதானிக்க முடிந்தது.இவை தமிழ் மக்களுக்கோ அல்லது தமிழர் தேசத்துக்கோ எந்தவொரு நன்மையையும் பெற்றுத்தரப்போவதில்லை.

2009 இல் யுத்தம் நிறைவடைந்தபொழுது மகிந்த ராஜபக்ச தரப்பு பல வாக்குறுதிகளை இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வழங்கியிருந்தது.அந்த வாக்குறுதிகளை சர்வதேச சமூகமும் நம்பி இலங்கைக்கு கோடிக்கணக்கில் டொலர்களை கொட்டி குவித்தது.ஆனால்,அந்த பணம் தமிழர் தேசத்தின் அபிவிருத்திக்கோ அல்லது யுத்தத்தால் பொருளாதார ரீதியில் நலிவடைந்திருந்த தமிழ் மக்களுக்கோ பிரயோசனப்படவில்லை.மாறாக தென்னிலங்கையின் அபிவிருத்திகளுக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் போக்கெற்றுகளுக்குமே சென்று சேர்ந்தன.இந்த விடயங்கள் அனைத்தும் சர்வதேசத்துக்கும் நன்கு தெரியும்.இந்தியாவுக்கும் நன்கு தெரிந்திருந்தது.ஆனால்,அதனை தட்டிக்கேட்பதற்கு எந்த தரப்பு முன்வந்திருக்கவில்லை.தமிழரின் நியாயமான போராட்டத்தை அழித்தொழிப்பதில் முன்னின்று செயற்பட்ட இந்தியா கூட ‘தொப்புள்கொடி உறவு’ என்ற ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு தமிழரை தென்னிலங்கையிடம் அடகு வைத்தே தன்னுடைய நலன்களை இலங்கையில் செயற்படுத்தி வந்தது.வந்துகொண்டிருக்கிறது.இது தமிழ் தலைமைகளுக்கும் தெரியாத விடயமல்ல.

உண்மையிலேயே இந்தியாவோ அல்லது சர்வதேச சமூகமோ தமிழர் மீது அக்கறை கொண்டிருந்தால் தமிழர் தேசத்தில் அரங்கேறும் குடிப்பரம்பலை சிதைக்கும் நடவடிக்கைகள்,நில ஆக்கிரமிப்புகள்,தொல்லியல் என்ற பெயரை வைத்துக்கொண்டு தமிழர் தேசத்தின் அடையாளத்தை இல்லாமலாக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக குரல்கொடுத்திருக்க முடியும் என்பதை தாண்டி குரல்கொடுத்திருக்க வேண்டும்.ஆனால்,யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்தும் கூட தமிழரின் நலனிலோ அல்லது தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவோ ஒரு தடவை கூட இலங்கை அரசுகளுக்கு அழுத்தங்களை கொடுத்ததாக வரலாறு இல்லை.அப்படியென்றால் தமிழர்கள் இந்தியாவையோ அல்லது சர்வதேச சமூகத்தையோ நம்புவதில் ஏதாவதொரு அர்த்தமிருக்கிறதா?என்றால் நிச்சயமாக இல்லை என்பதே பதிலாக அமையும்.

காரணம்,தமிழ் மக்களுடைய நிலத்துக்கான போராட்டம்,உரிமைக்கான போராட்டம்,கலாசார–பண்பாட்டுக்கான போராட்டம் என தமிழர் தேசத்துக்கான முழுமையான போராட்டத்தையும் 2009 மே மாதத்துடன் இந்தியாவும் சர்வதேச சமூகமும் முற்றுமுழுதாக ஒழித்துவிட்டன.2009 இல் நடந்த இறுதிக்கட்ட போர் என்பது விடுதலைப்புலிகளை அழிப்பதற்கான போர் அல்ல.மாறாக அந்த போர், தமிழ் மக்கள் எதற்காகவெல்லாம் போராடினார்களோ அவை அனைத்தையும் அழித்தொழிக்கும் ஒரு போராகவே சர்வதேச சமூகம் மேற்கொண்டது.அதில் சர்வதேச சமூகம் வெற்றியும் அடைந்தது.அதன் பிரதிபலன்களையே இன்று தமிழர் தேசத்தில் சர்வதேச சமூகம் அரங்கேற்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே இதில் ஏமாற்றப்பட்டவர்கள் தமிழர்களே.ஏமாற்றப்பட்டுக்கொண்டிருப்பவர்களும் தமிழர்களே.இனியும் ஏமாற்றப்படப்போகிறவர்களும் தமிழர்களே.ஆகவே தமிழ் மக்கள் என்பவர்கள் தங்களுடைய மண்ணையும் தங்களுடைய கலாசார பண்பாடுகளையும் இன அடையாளங்களையும் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு இவற்றை வழங்கவேண்டுமாகவிருந்தால் அல்லது 70 ஆண்டுகால போராட்டத்துக்கு ஒரு உயிரை கொடுக்கவேண்டுமாகவிருந்தால் அதற்கான முழு உரிமையும் பலமும் மக்களிடம் மாத்திரமே இருக்கிறது.எங்களுக்கு சர்வதேசம் வந்து எல்லாவற்றையும் அள்ளிக்கொடுக்கும் என இனியும் அரசியல்வாதிகளின் கதைகளை நம்பியிராமல் மக்கள் எழுச்சி தமிழர் தேசத்தில் எழவேண்டும்.அந்த எழுச்சி மாத்திரமே இலங்கை அரசையும் சர்வதேச சமூகத்தையும் அச்சம்கொள்ளவைக்கும்.அதன்மூலமே தமிழரின் விடிவு மெல்ல மெல்ல பிறக்கும் என்பதை கூறிவைக்கின்றோம்.

# தமிழ் மக்களின் எழுச்சிக்கு தந்திரோபாய அரசியல் தான் காலத்தின் தேவை

புனிதப்பிரியா பன்னீர்செல்வம்

தமிழ் இன அடையாளங்களை அழிப்பது மனித நாகரீகத்தில் ஏற்படுத்தப்பட்ட இன்னுமொரு வடு என்றே உலக வரலாற்றில் பதியப்படல் வேண்டும். மனிதம் காக்கும் மனித நாகரீகம் காக்கும் சமூகொ சமயொ அரசியல் அமைப்புகளின் கண்முன்னாலேயே இலங்கையில் தற்போது தமிழ் மக்களின் இன அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது. யுத்தம் நிறைவடைய முன்னரும் சரி அதன் பின்னரும் சரி காலம் காலமாய் வடொ கிழக்கு மக்களின் ஒரே எதிர்பார்ப்பு அரசியல் தீர்வும் அடிப்படை உரிமைகளும் இனப்படுகொலையாளுக்கான தண்டனை கிடைக்க வேண்டும் என்பது மாத்திரம் தான். ஆனால் தமிழர்களின் எதிர்பார்ப்பு என்னவோ பகல கனவாகவே போய் கொண்டு இருக்கின்றது. மக்களின் எதிர்ப்பார்ப்புக்கள் ஏதும் நிறைவேற்றப்படவும் இல்லை.

மக்களின் வாழ்வை பிரகாசமாக்கும் எண்ணம் வடொ கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கும்; இல்லை. மக்களின் துன்பங்களில் குளிர்காயும் அரசியல்வாதிகள் தான் இன்று வடொகிழக்கில் செறிந்து காணப்படுகின்றனர். ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் வடொகிழக்கு தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு விடிவு கிடைக்கும் என்று தேர்தல் மேடைகளில் வீரியம் பேசும் அரசியல் வியாதிகள் அதை செயற்படுத்துவதை ஏனோ தாமதித்து வருகின்றனர். உதாரணமாக ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது பொதுவாக உள்ளூராட்சி மன்றங்கள் என்பவை மக்களுக்குத் தேவையான அடிப்படையான வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு ஏற்பாடு செய்யக்கூடி அரச நிறுவனமாகும்.

ஆனால் வடொ கிழக்கு தமிழ்ச் சூழலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது கூட சுய நிர்ணயம் சமஸ்டி மனித உரிமை வடக்கு - கிழக்கு இணைப்பு - இப்படியான சொற்கள்தான் உச்சரிக்கப்படுகிறன்றன.

மக்களுக்கு பொதுவாக நினைவாற்றல் சற்று குறைவு தான் ஏனெனில் அவர்கள் தன் சார்ந்த உறவுகள் என அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் முகம் கொடுப்பவர்கள். இதனால் அரசியல்வாதிகள் முன்னர் சொன்னதில் எதனை நிறைவேற்றினார்கள் அல்லது நிறைவேற்றக் கூடியவைகளைத் தான் இவர்கள் கூறுகின்றார்களா? இப்படியான கேள்விகளின் வழியாக மக்கள் சிந்திக்க மறந்து விடுகின்றனர். இதற்கு அவர்களது குறைவான ஞாபகசக்தியே காரணம். இது தமிழ் மக்களுக்கு மட்டுமே உரித்தானது அல்ல. இது இந்த நாட்டில் பொதுவாக நடக்க கூடிய ஒரு விடயம் தான். இதன் காரணமாகத்தான் அரசியல்வாதிகளால் மக்களை இலகுவாக ஏமாற்ற முடிகிறது.

1949ஆம் ஆண்டு இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்டது. அந்த காலத்திலிருந்து இன்று வரை வடொ கிழக்கு மக்களுக்கு என்ன கிடைத்தது இதுவரை என்ற ஒரு கேள்வியை முன் வைத்தால் அந்த கேள்விக்கு பிரதேசொ மாகாணொ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ மக்களுக்கோ சரியான ஒரு பதிலை திட்டவட்டமாக கூறிவிட முடியாது. அவ்வாறு இல்லை ஒரு பதில் இருக்கின்றது என விவாதித்தால் 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக கிடைக்கப்பெற்ற மாகாண சபை ஒன்றைத்தான் சொல்லிவிட முடியும். மாகாண சபையின் அதிகாரங்களில் போதாமை இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒரு விடயம் தான். ஆனால் முடிந்தவரையில் அதனை மக்களின் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு அரசியல்வாதிகள் ஒன்று சேர இருக்கும் ஒரு இடத்தில் அதிகளவிலான ஊழல் நடைபெறுகிறதென்றால் அல்லது நடைபெற்றிருக்கிறதென்று சந்தேகம் எழுகிறதென்றால் அதன் பொருள் அங்கு அதிகளவு நிதி வந்திருக்கிறது என்பதுதானே? ஆனால் இதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவோ விசாரணை செய்யவோ எந்த ஒரு அரசியல்வாதியும் முன்னிலை வகிப்பதில்லை. காரணம் எங்கே தான் செய்த ஊழல் அம்பலமாகிவிடுமோ என்ற அச்சம் மட்டும் தான் அவர்கள் மத்தியில் குடி கொண்டிருக்கும். எனவே தான் இன்று பேரினவாதிகளால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இன அடையாளங்கள் அழிப்பும் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகளுக்கும் எதிராக எதிர்த்து நின்று கேள்;வி கேட்பதற்கு எந்த அரசியல்வாதிக்கும் துணிவில்லை. தமிழ் அரசியல்வாதிகளின் இந்த செயற்பாடுகளின் காரணமாக தான் பேரினவாதிகள் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து ஆங்காங்கே சிங்கள மக்களை குடியேற்றி வருகின்றனர்.



30 வருடங்களுக்குப் பின்னர் கூட தமிழர்களுக்கான ஒரு அரசியல் தீர்வு இன்று வரையிலும் கிடைக்கப் பெறவில்லை என்பது மிகவும் மனவருத்தமளிக்க கூடிய விடயம் என்று தான் கூற வேண்டும். தமிழ் மக்களின் அடிப்படைகளை பெற்று கொள்ள சிங்கள பேரினவாதிகளின் கால்களில் விழ வேண்டியதும் இல்லை எமது பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்று தருமாறு இந்தியாவையோ சர்வதேசத்தையோ நடுநிலை வகிக்குமாறு கூற வேண்டிய தேவையும் இல்லை. நமக்கான பிரச்சினைகளுக்கு நாம் தான் தீர்வுகளை பெற்று கொள்ள வேண்டும்;. அது நல்ல அரசியல் தலைமைகள் இருந்தால் மாத்திரமே கிடைக்குமம். வெறுமனே பொய்யான அரசின் கைக்கூலி அரசியல்வாதிகளுடன் சேர்ந்து போராட்டம் செய்வதினால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைத்து விடாது. நமக்கான போராட்டத்தை நாம் போராடுவோம். போராட்டம் என்பது சுலோகங்களை உயர்த்திப்பிடிப்பது மட்டுமல்லொ அவ்வாறான கோரிக்கைளை ஒருபுறம் வலியுறுத்திக் கொண்டே பிறிதொரு புறமாக சாத்தியமான வழிகளால் புகுந்து எங்களுக்குத் தேவையானவற்றில் எடுக்கக்கூடியவற்றை எடுத்துக்கொள்வது. இது ஒரு தொடர் செயற்பாடு. அதேவேளை பிறிதொரு புறமாக எங்களது அரசியல் நிலைப்பாட்டை தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டுமிருப்பது. இதுதான் அரசியலில் பேரம்பேசும் பலத்தை இழக்காமல் இருப்பதற்கான யுக்தி ஆகும். இந்த இரண்டிற்கும் இடையில் ஒரு சமநிலையை பேணிக்கொள்ளும் சமூகமே அரசியலில் முன்னோக்கி நகர முடியும். இவ்வாறான சிந்தனைவழி நகராத சமூகங்கள் தனது சிதைவை உணர்ந்து கொள்ளாது முன்னோக்கி நகர்வதான ஒரு கற்பனையில் மூழ்கிக் கிடக்கும். தமிழ் சமூகம் அப்படியானதொரு சமூகமா?

எங்களுடைய அரசியல் செயற்பாடுகள் பல தலைமுறைகளை கண்டுவிட்டன. ஆனால் முன்னர் இருந்த நிலைமையை விடவும் தமிழ் சமூகம் சகல விடயங்களிலும் பின்நோக்கி தள்ளப்பட்டிருக்கிறது. அவ்வாறாயின் எங்களுடைய தந்திரோபாயங்களில் எங்கோ பெரியதொரு குறைப்பாடு இருக்கின்றது என்று தான் அர்த்தம். அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்று கொள்வதை அரசியல்வாதிகளோடே இருக்கும் சிங்கள பேரினவாதிகளுக்கு துணை போகும் ஒரு சாக்கடை அரசியல் நடத்தும் கறுப்பு ஆடு இருக்கின்றது என்று தான் அர்த்தப்படும்.

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மேறற்கொள்ளப்பட்டுள்ள சிங்கள குடியேற்றங்களே இதற்கு சான்று பகரும். தமிழ் அரசியல் தலைமைகளினால் இவற்றை தடுக்க முடிந்ததா? ஒரு புறம் தமிழ் தலைமைகள் உரிமைகளுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் போதுதான் மறுபுறத்தில் தமிழ் மக்களின் சனத்தொகை பரம்பலை செயற்கையாக மாற்றியமைக்கும் வகையிலான செயற்பாடுகளும் அரங்கேறிக் கொண்டிருந்தன. ஆனால் இன்று நடந்து முடிந்தவைகள் நடந்து முடிந்தவைகள்தான். இனி எக்காலத்திலும் தமிழர் பிரதேசங்களில் இருக்கின்ற சிங்கள மக்களை வெளியேற்ற முடியாது. தமிழ் மக்களின் அரசியல் சமூக மற்றும் பொருளாதார வாழ்வையாவது பாதுகாப்பதற்கும் அதனை மேம்படுத்துவற்கும் தமிழ் தலைமைகளிடம் இருக்கின்ற தந்திரோபாயங்கள் என்ன?

தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகளை விட்டுவிட வேண்டியதில்லை. அதேவேளை மீளவும் தமிழர்கள் நடுவீதிக்கு வந்துவிடாத வகையிலும் உபாயங்கள் அமைந்திருக்க வேண்டும். வடொ கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் இந்த நிலைமைகளை நிதானமாகவும் தந்திரோபாயமாகவும் கையாளாது விட்டால் ஒட்டுமொத்த உலகமும் தமிழர்களை கைவிட்டுவிடும் ஆபத்துமுண்டு. இன்றைய சூழலில் தந்திரோபாய ரீதியான அரசியல் அணுகுமுறைகள் தான் தமிழர்களுக்கு கைகொடுக்கக் கூடியது. வெறும் எதிர்ப்பும் தவறு. அதேபோன்று வெறும் ஆதரவும் தவறு. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு அரசியல் உபாயத்தை இனங்கண்டு செயலாற்ற வேண்டிய பொறுப்பு நம் தமிழ் அரசியல்வாதிகளிடம் உண்டு. ஏனெனில் நிலைமைகள் மிகவும் வேகமாக தமிழ் மக்களுக்குப் பாதமாக மாறிக் கொண்டிருக்கின்றன.

# யாழ்.நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து மாநகர சபையை வெளியேற்றியமைக்கு இடைக்கால தடை

## யாழ். மேல்நீதிமன்றம் பிறப்பித்தது

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ். மாநகர சபையை வடமாகாண ஆளுநர் வெளியேறப் பணித்தமைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் இடைக்கால கட்டளை பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் யாழ். மாநகர சபையினை நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து வெளியேற பணித்ததுடன், அதனைப் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்துள்ளது.

இதற்கு எதிராக யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கில் யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் முன்னிலையாகி இருந்தபோதே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் இந்த இடைக்காலக் கட்டளையைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனோ கணேசனுக்கு செல்வத்தின் அறிவிப்பு





தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் என்ற அபார முயற்சியைப் பாராட்டுவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் காலங்களில் மனோகணேசனுடன் உறுதுணையாக சேர்ந்து பயணிப்பதற்கு தயாராக உள்ளதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அமைத்திடும் யோசனையை முன்னிறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தமிழ் நாடாளுமன்ற அரங்க முயற்சிக்கு எமது பங்களிப்பு என்றும் உள்ளது

## மனோவுக்கு சித்தர் நல்லெண்ண சமிக்ஞை

'உங்களுடைய தமிழ் நாடாளுமன்ற அரங்க முயற்சிக்கு எமது பங்களிப்பு என்றும் உள்ளது. இந்த முயற்சியை முன்னெடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்' என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.



அண்மையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அமைத்திடும் யோசனையை மனோ கணேசன் முன்னிறுத்தியுள்ளார்.

அத்துடன் இந்த யோசனையைக் குறித்து, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. ஆகியோருக்கு மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# தமிழர்களின் காணிகளைப் பாதுகாக்க எந்த எல்லைக்கும் போகத் தயார்

தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களைப் பாதுகாப்பதற்குத் தாம் எந்த எல்லைக்குப் போகவும் தயாராக உள்ளதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களில் ஒன்றான முல்லைத்தீவு - கருநாட்டுக்கேணியில் தமிழர்களின் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளும் முயற்சி ஒன்று (03.04.2023) மேற்கொள்ளப்பட்டுள்ளதா கூறப்படுகின்றது.

இந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி தமிழ் மக்களும், ரவிகரனும் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பூர்வீக எல்லைக் கிராமமான கருநாட்டுக்கேணித் தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளை ஆக்கிரமிப்புச் செய்து அங்கு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளும் முயற்சிகள் தற்போது முனைப்புப் பெற்றுள்ளன.

குறிப்பாக கருநாட்டுக்கேணிப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலயத்தைச் சூழவுள்ள, தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை அபகரித்து அங்கு 180 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்று



வதற்கான முயற்சிகள் இங்கு இடம்பெறுவதாக அறிகின்றோம்.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளரான கீர்த்தி தென்னக்கோன் என்னும் நபருடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையே இந்த சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள காணிகள் அனைத்திலும் எமது தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்தனர்.

இந்நிலையில், கடந்த 1973 மற்றும், 1979ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட காணி உத்தரவுப் பத்திரங்கள் அவர்களுடைய கைகளிலே இருக்கின்றன.

இந்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி எனப்படுகின்ற இந்த எல்லைக் கிராமங்கள், பூர்வீக பழந்தமிழ் கிராமங்களாகும். இங்கு வாழ்ந்த மக்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு இந்தப் பகுதிகளிலிருந்து சிங்கள இனவெறி இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டனர்.

அவ்வாறு வெளியேற்றப்பட்ட பின்னர் இங்குள்ள தமிழ் மக்கள் நெற்பயிற்செய்கைக்காக பயன்படுத்திய நீர்ப்பாசனக் குளங்கள் அவற்றின் கீழான வயல் நிலங்கள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிலையில், தமிழ் மக்கள் 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்திய உந்திராயன் குளம், மறிச்சுக்கட்டிக்குளம், ஆமையன்குளம் ஆகிய குளங்களையும் அவற்றின் கீழான வயல் நிலங்களையும் தற்போது சிங்களவர்களே பயன்படுத்தி வருகின்றார்கள்.

இதுதவிர தமிழ் மக்களுடைய மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் தற்போது சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவருகின்றது. அத்தோடு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணித் தமிழ்மக்கள்தமது மானாவாரி விவசாய நிலங்களில் பயிற்செய்கை நடவடிக்கை செய்யும்போது மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்களால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. சிங்கள மக்களாலும் கூட இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றது. எமது எல்லைக் கிராமங்களிலுள்ள தமிழ் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும்பான்மையினத்தவர்களால் தாக்கப்படுவதும், தமிழர்களுடைய கால்நடைகள் திருடப்படுகின்ற சம்பவங்கள் கூட ஒருபுறம் இடம்பெறுகின்றன.

இவ்வாறாக எல்லைக்கிராமங்களிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் பலவித அழுத்தங்களுக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர். இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக்காணிகளில் கூட சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளின் ஊடாக, இங்கு வாழும் ஆதிக்குடிகளான தமிழ் மக்களை முற்று முழுதாக அப்புறப்படுத்திவிட்டு, தமிழர்களின் பூர்வீகங்களில் சிங்களவர்களைக் குடியேற்றவேண்டும் என்ற நோக்குடனேயே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. எமது தமிழ் மக்களின் பூர்வீக எல்லாக்கிராமங்களைப் பாதுகாப்பதற்கு நாம் எந்த எல்லைக்கும் போகத் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துங்கள்; பிரதமருக்கு சென்ற கடிதம்

மன்னார் நகர சபையை மாநகர சபையாகத் தரம் உயர்த்துவது தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அனுப்பப்பட்ட கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது,

மன்னார் நகர சபையை மாநகர சபையாகத் தரம் உயர்த்துவது தொடர்பில் அமைச்சரவையில் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

எனினும், இன்னும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லை என்பதனை தங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எனவே விரைவில் மன்னார் நகர சபையை மாநகர சபையாகத் தரம் உயர்த்துவது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனக் குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'அமைச்சர் அவர்களே நீங்கள் ஒரு இனவாதி'

## விதுரவை பார்த்து கொந்தளித்த சாணக்கியன்



அமைச்சர் அவர்களே நீங்கள் ஒரு இனவாதி எனத் தேசிய மரபுரிமைகள் கிராமிய கலை கலாசார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் விமர்சித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அமைச்சர் அவர்களே நீங்கள் ஒரு இனவாதி. நீங்கள் கடந்த காலங்களில் மட்டக்களப்புக்கு வந்த பொழுதும் குசலானமலையில் வைத்துத் தடுத்து அனுப்பினப்படியால் தான் இன்றும் குசலானமலையிலே சைவசமய வழிபாடுகள் செய்கின்றோம்.

இந்த தொல்பொருள் திணைக்களத்தினை வைத்து நீங்கள் இந்த நாட்டுக்குள்ளே மீண்டுமொரு குழப்பத்தை ஏற்படுத்தத்தான் முயற்சித்திருக்கின்றீர்கள்.

வெடுக்குநாறி மலையில் ஒரு குழப்பம், குருந்தூர் மலையில் ஒரு குழப்பம், குசலானமலையில் ஒரு குழப்பம், அரசிமலை என்று கூறி திருகோணமலை புல்மோட்டையில் ஒரு குழப்பம்.

இந்த நாட்டினுடைய IMF இல் இருந்து ஒப்பந்தம் வந்தாலும் சரி எது வந்தாலும் சரி உங்களைப்போல இன வாதி அமைச்சர்கள் இந்த தொல்பொருள் திணைக்களத்தை வைத்து வடக்கு - கிழக்கிலே எங்களுடைய காணிகளைச் சுவீகரிக்க செய்வது தான் எங்களுடைய பிரச்சினை எனத் தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர்கள் மீதான அழுத்தங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது

ஊடகவியலாளர்கள் மீதான அழுத்தங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மியன்மார் அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட அரசியினை புத்தாண்டை முன்னிட்டு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மியன்மார் அரசாங்கத்திடம் வர்த்தக வாணிபத்துறை அமைச்சு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்காக ஒன்பதாயிரம் அரிசி பொதிகள்வழங்கும் செயற்திட்டத்தில் முதல் கட்டமாக மண்முனை மேற்கு ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 500 பயனாளிகளுக்கு அரிசிப்பொதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இன்று வடக்கு கிழக்கில் தமிழ் காட்சிகள் அனைத்தும் தமிழர்களின் உடைய பிரச்சினை சார்ந்த விடயங்களில் அனைவரும் ஒரே குரலாகப் பேச வேண்டும். நாங்கள் கொள்கை அடிப்படையில் வடகிழக்கு இணைப்பை வலியுறுத்தி வருகின்றவர்கள்.

வடகிழக்கு இணைப்பில் மாத்திரமே கிழக்கு மாகாணத்தைப் பாதுகாக்கக் கொள்ள முடியும் என்கின்ற தெளிவான சிந்தனை இருக்கின்றேன். வடகிழக்கில் இருக்கின்ற தமிழ் காட்சிகள் மாத்திரம் அல்ல அனைத்து தமிழ் கட்சிகளும் நாங்கள் தமிழர்களுடைய பிரச்சனை என்கின்ற வருகின்றபோது ஆளுங்கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அனைவரும் ஒரே குரலில் பேச வேண்டும்.

இன்று நில அபகரிப்பு வருகின்றது எங்களுடைய மக்கள் எல்லா அபிவிருத்தி திட்டங்களிலும் கண்மூடித்தனமாக இருக்கவில்லை. ஆனால், அபிவிருத்தி என்கின்ற போர்வையில் ஒரு சில தனி நபர்கள் வந்து 500 ஏக்கர் 600 ஏக்கர் என்கின்ற செயல் திட்டங்களுக்கு



நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

எங்களுக்கு அபிவிருத்தி மற்றும் உரிமை எங்களுக்குத் தேவை. ஆனால் அந்த அபிவிருத்தி என்கின்ற விடயத்தை வைத்துக் கொண்டு நில அபகரிப்பை நாங்கள் அனுமதிக்க முடியாது.

எனவே, தமிழ் கட்சிகள் முன்னெடுக்கின்ற நியாயமான போராட்டங்களில் நாங்கள் நிச்சயமாக வரவேற்கின்றோம். நாங்கள் தமிழ் மக்களை மையப்படுத்தி அரசியல் செய்கின்றோம்.

அதனால் தயவு செய்து எல்லா தமிழ் கட்சிகளும் நான் கூறுகின்ற விடயம் ஒன்றுதான் தமிழர்களுடைய பிரச்சினை என்று வருகின்றபோது, எல்லாரும் ஒரே குரலில் ஒருமித்து நிற்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

தமிழர் தாயக பிரதேசத்தில் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படுகின்ற வணக்க ஸ்தலங்களை உடைக்கின்ற செயற்பாடு, தமிழ் கிராமங்களைத் திட்டமிட்டு அபகரிக்கின்ற செயற்பாடு மற்றும் குடியரசுகளை அமர்த்துகின்ற செயற்பாடு. அதோடு அபிவிருத்தி என்கின்ற போர்வையில் குடியேற்றங்களை அமர்த்துகின்ற செயற்பாடு சில இடங்களில் வடகிழக்கில் இடம்பெற்றிருக்கின்றது.

இவ்வாறான வேலைத் திட்டங்களை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவற்றை அனுமதிக்கக் கூடாது.

தொல்பொருள் என்கின்ற போர்வையில் தமிழர்களுடைய வரலாற்றுப் பூர்வீகங்களைப் பண்பாட்டோடு ஒன்றிணைந்து இருக்கின்ற தலங்களை அழிக்க நினைக்கின்ற நாசக்கார செயற்பாடு மிக மோசமானது.

கடந்த காலங்களில் தமிழ்ச் சமூகம், தமிழ் இளைஞர் - யுவதிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் பலவகையில் துன்புறுத்தப்பட்டு இன்றும் கூட அந்த சட்டத்தின் கீழ் அரசியல் கைதிகளாகப் பல கோணங்களிலே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த சட்டம் அப்போது இருந்தபோது உண்மையிலே யாரும் பெரிதாகக் கவலைப்படவில்லை குறிப்பாகத் தென்னிலங்கையில் இருப்பவர்களும் இதனால் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட சமூகம் தமிழ்ச் சமூகமே.

இப்போது இந்த பயங்கரவாத தடைச் சட்டம் என்பது ஒட்டுமொத்த இலங்கையை மையப்படுத்திக் கொண்டுவரப்படுகின்ற ஒன்று என்பதனால், இன்று தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் தென்னிலங்கையில் உள்ளவர்கள் கூடுதலாகக் குரல் எழுப்புகின்ற நிலைமையினை பார்க்கின்றோம்.

ஆனால் ஒரு கட்டத்தில் எங்களுடைய சமூகத்திற்கு இந்த பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டபோது, தென்னிலங்கை அரசியல்வாதிகள் எவரும் வாய் திறக்கவில்லை.

இந்த நிலையில், இந்த சட்டம் தொடர்பான விடயங்கள் சரியான முறையில் ஆராயப்பட வேண்டும். அதேவேளையில், அது மீளவும் எங்களுடைய சமூகத்தை அடக்கும் செயற்பாடாக வரும் என்றால் நிச்சயமாக அது ஏற்றுக்கொள்ள முடியாது. அதனைத் திருத்த வேண்டும். நிச்சயமாக இந்த சட்டம் வந்தவுடன் நாடாளுமன்றத்தில் சட்டமாகப் போவதில்லை.

வாத பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்படும் அதில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டம் என்கின்ற பேரிலே இன்று வரை அந்த துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற, அதிலும் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட சமூகம் தமிழ்ச் சமூகம். ஆகவே எந்த சட்டங்கள் கொண்டு வந்தாலும் எங்களுடைய சமூகத்தினை அடக்குகின்ற செயற்பாடாக இருக்கக் கூடாது. அதில் மாற்றங்கள் பாரியளவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார்.

## கல்முனையில் மாட்டிறைச்சியின் கட்டுப்பாட்டு விலை

கல்முனை மாநகர சபை எல்லையினுள் புனித ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு, மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் (03.04.2023) இறைச்சிக் கடை உரிமையாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி (04.04.2023) தொடக்கம் ஒரு கிலோ கிராம் தனி இறைச்சியை 2000 ரூபாவுக்கும் 200 கிராம் முள் சேர்க்கப்பட்ட ஒரு கிலோ கிராம் இறைச்சியை 1800 ரூபாவுக்கும் விற்பனை செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விலைப்பட்டியலை அனைத்து இறைச்சிக் கடைகளிலும் காட்சிப்படுத்தும் பொருட்டு குறித்த விலைப்பட்டியல் ஆணையாளரினால் இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜெளஸி, கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டபொல, வருமான வரி பரிசோதகர்களான ஏ.ஜே.சமீம், எம்.சலீம், எம்.எஸ்.எம்.உபைத், எம்.ரி.சப்னம் சாஜிதா மற்றும் எல்.எம்.சாதிக் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

## இறக்காமம் ஹோட்டல் மீது 8 பேர் கொண்ட குழு தாக்குதல்



அம்பாறை - இறக்காமம், வரிப்பதான்சேனையில் அமைந்துள்ள சலாமத் ஹோட்டல் மீது 8 பேர் கொண்ட குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் 03.04.2023 அன்று பதிவாகியுள்ளது.

நேற்றிரவு ஹிங்குரானை பகுதியைச் சேர்ந்த குழுவினராலேயே ஹோட்டலில் உள்ள விலை மதிப்புள்ள பொருட்கள் தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் இதைத் தடுத்து நிறுத்த முயன்ற ஹோட்டல் உரிமையாளரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரையும் குறித்த குழுவினர் தாக்கியுள்ளனர்.

ஹோட்டலின் உரிமையாளரும் தாக்குதல் நடத்திய குழுவைச் சேர்ந்த இரண்டு நபர்களும் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த முரண்பாட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

எனவே இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காரைதீவில் களை கட்டிய கண்ணகை அம்மனின் 12 மணி நேர வீதி உலா!

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர மகோற் சவத்தின் இறுதி நாள் வீதி உலா(3) விடிய விடிய இடம் பெற்றது .

இப் 12 மணி நேர வீதியுலா மாலை 6:00 மணிக்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்களின் விசேட பூஜையுடன் ஆரம்பமாகி மறுநாள் நேற்று (4) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நிறைவடைந்தது.

மூன்று அலங்கார தேர்கள் பெண்கள் வடம் பிடிக்க வீதி உலா மிகவும் சிறப்பாக பட்டாசு வெடிகள் சகிதம் இடம்பெற்றது. இன்று (5) புதன்கிழமை சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

முன்னதாக தினமும் திருவிழாக்கள் வெளிவீதி உஊர் வலத்தோடு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையின் அடர்ந்த காட்டிற்குள் சீனாவின் இரகசிய திட்டம்

## வெளிச்சத்துக்கு கொண்டுவந்த பிரித்தானிய இணையத்தளம்

சீனா வழங்கிய கடன்களின் மூலோபாய ஆதாய நடவடிக்கையாக சிறிலங்காவில் ராடார் தளம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக நிபுணர்களை மேற்கோள்காட்டி பிரித்தானிய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை உளவு துறை தரப்புக்களால் இந்த திட்டம் தொடர்பிலான தகவல் வெளிக்கொணரப்பட்டுள்ளதாகவும் அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ராடார்தளம் சிறிலங்காவின் மாத்தறை பகுதியில் உள்ள அடர்ந்த வனப்பகுதியில் அமைக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த ராடர் தளத்தை சீனா, சிறிலங்காவில் அமைப்பதன் மூலம் இந்தியப் பெருங்கடலில் அமையப்பெற்றுள்ள இந்திய மற்றும் அமெரிக்காவின் இராணுவத்தளங்களை உளவு பார்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி, இந்தியாவிலுள்ள ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஒடிசாவிலுள்ள ஏவுகணை சோதனைத்தளம் ஆகியனவற்றையும் குறித்த ராடர் மூலம் அவதானிக்க முடியும்.

அதேவேளை, இந்திய கடற்பரப்பின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள இந்திய கடற்படை முகாம்கள், டியாகோ கார்சியாவிலுள்ள அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தளங்களை உளவு பார்ப்பதற்கும் குறித்த ராடர் சீனாவிற்கு பெரிதும் பயன்படும்.

இவ்வாறான நிலையிலேயே, கடந்த ஆண்டுகளில் சீனா 180 இற்கும் மேற்பட்ட விண்வெளி கருவிகளை ஏவியுள்ளதுடன் இந்த வருடத்தில் 200 விண்வெளி கருவிகளை அனுப்பவதற்கும் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையை பொறிக்குள் தள்ளியுள்ள சர்வதேச நாணய நிதியம்

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியது கடனல்ல, பொறி என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்பட்டால் இலங்கை விரைவில் வீதியில் விழும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வங்கிகளில் கடன் பெற்று வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதாக இருந்தாலும் அரசாங்க சொத்துக்களை விற்குமாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு செய்தால் இலங்கையை முடக்கி விடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஐக்கிய மக்கள் சக்தி பிளவடைகிறதா?

பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பலவீனமாவதை தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள எதிர்கட்சிதலைவர் சஜித்பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இரவுஉணவிற்காக அழைத்திருந்தார்.

பத்தரமுல்லயில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

சிதைவுறும் நிலையில் உள்ள கட்சியை இழுத்துப்பிடித்து வைத்திருப்பதற்கான ஒரு முயற்சியாகவே இந்த சந்திப்புஇடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தொடர்ந்தும் கட்சியிலிருக்குமாறு வேண்டுகோள் விடுத்தார் என இந்த சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மூன்று சிரேஸ்ட உறுப்பினர்களான கபீர் ஹாசிம் ஹர்சா சில்வா எரான்விக்கிரமரட்ண ஆகியோர்அரசாங்கத்துடன் இணைந்துகொள்வதற்காக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதருணத்தில் சஜித் பிரேமதாச தனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துள்ளார். என இரண்டு தரப்பிற்கும் நெருக்கமான சிரேஸ்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மூவரும் ஜனாதிபதியின் பொருளாதார கொள்கைகளிற்கு ஆதரவளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தில் இணைந்துகொள்வதற்கு ஹர்சாடிசில்வா இணங்கினால் அமைச்சரவை மாற்றத்தின் போது அவர் கொள்கை அமுலாக்கல் அமைச்சராக நியமிக்கப்படுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விரைவில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறலாம் இதன்போது நிதியமைச்சின் சில பொறுப்புகள் கொள்கை அமுலாக்கல் அமைச்சின் கீழ் வரலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எரான் விக்கிரமரட்ணவும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தயாராக உள்ளார், ஆனால் அவர் அமைச்சு பொறுப்பை கோரவில்லை.

இதேவேளை ஹபீர்ஹாசிமிற்கு அமைச்சு பொறுப்பை வழங்குவது குறித்து ஆராயப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்கட்சி தலைவரின் மனைவி மற்றும் சகோதரியின் தலையீடுகள்காரணமாக தொடர்ச்சியாக ஒரு நிலைப்பாட்டை பேண முடியவில்லை இதன் காரணமாகவே சிரேஸ்ட உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேற சிந்திக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சியின் குழுகூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் இந்த மூவரினால் பின்னர் மாற்றப்படுகின்றன இது கட்சியின் உறுப்பினர்களிற்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சி உறுப்பினர்களின் தீர்மானங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை கட்சியை எதிர்க்கட்சி தலைவரும் அவரது மனைவியும் தங்கையும் அனேகமாக வழிநடத்துவதால் அவர்களே தீர்மானங்களை எடுக்கின்றனர் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பாடசாலைகளுக்கு விடுமுறை

அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற அனைத்து பாடசாலைகளுக்கும் நேற்று (04) முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாறு விடுமுறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் அரசாங்கத்திடம் விடுத்துள்ள வேண்டுகோள்

நீதித்துறை சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசியல்வாதிகள் செயற்படுகின்றமை சர்வதேசத்தின் மத்தியிலும் விமர்சனங்களுக்கு உள்ளாகக் கூடும்.

எனவே பாராளுமன்ற சிறப்புரிமைகளை முன்வைத்து நீதித்துறை சுயாதீனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது றித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை முடக்குவதை தவிர்க்குமாறு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவு பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாகக் குறிப்பிட்டு நீதிமன்றத்தை சவாலுக்குட்படுத்துவதை அனுமதிக்க முடியாது.

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் அதனை மதித்தல் என்பன அனைத்து அரச நிறுவனங்களினதும் கடமையாகும்.

அவ்வாறிருக்கையில் நீதித்துறை சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசியல்வாதிகள் செயற்படுகின்றமை சர்வதேசத்தின் மத்தியிலும் விமர்சனங்களுக்கு உள்ளாகக் கூடும்.

அத்தோடு அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை முன்வைக்கும் ஊடகங்களும் முடக்கப்படக் கூடும் என்பதோடு , இது கருத்து சுதந்திரத்தில் பாரிய தாக்கத்தினை செலுத்தும்.

இவ்வாறான நிலைமைகள் இனிவரும் காலங்களில் ஏற்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன்.

நாட்டில் அரசியலமைப்பையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்குமாறும் , நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்துமாறும் , சகல பிரஜைகளினதும் கருத்து சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். இருபாலை பகுதியில் சட்டவிரோதமான முறையில் சிறுவர் இல்லம்;

## துன்புறுத்தப்பட்ட சிறுவர்கள்

யாழ்ப்பாணம், இருபாலை பகுதியில் சட்டவிரோதமான முறையில் சிறுவர் இல்லம் ஒன்றினை நடத்தியமை மற்றும் அங்கிருந்த சிறுவர்களை துன்புறுத்திய குற்றச்சாட்டில் அருட்சகோதரி உள்ளிட்ட மூவர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இருபாலை பகுதியில் கிறிஸ்தவ சபை ஒன்றினால் நடத்தப்பட்டு வந்த சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற துன்புறுத்தல்கள் தாங்க முடியாமல் மூன்று சிறுமிகள் இல்லத்தில் இருந்து தப்பியோடி உள்ளனர்.

இது தொடர்பில் தகவல்கள் வெளியாகிய நிலையில் விசாரணைகளை சிறுவர் நன்னடத்தை பிரிவினர் கோப்பாய் காவல்துறையினருடன் இணைந்து முன்னெடுத்தனர்.

இதன் போது , குறித்த சிறுவர் இல்லமானது , சிறுவர் இல்லத்திற்கான அனுமதிகள் பெறப்படாது நடாத்தப்பட்டு வந்தமை கண்டறியப்பட்டதுடன், அங்கு இருந்த 13 சிறுவர்களும் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட சிறுவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, சிறுவர்களிடம் கடுமையான வேலைகளை வாங்கியமை , உடல் ரீதியான துன்புறுத்தல்கள் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டமை , உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தியமை , கட்டாய மத மாற்றத்திற்கு உள்ளாக்கியமை உள்ளிட்ட விடயங்கள் தெரிய வந்துள்ளன. தொடர்ந்து, மீட்கப்பட்ட 13 சிறுவர்கள் மற்றும் சிறுவர் இல்லத்தில் இருந்து தப்பியோடிய நிலையில் மீட்கப்பட்ட 03 சிறுவர்கள் உட்பட 16 சிறுவர்களையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்தி வைத்திய அறிக்கை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறுவர் இல்ல முகாமையாளர், இல்ல காப்பாளர் மற்றும் சமையலாளர் ஆகிய மூவரையும் காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இதேபோன்று மற்றுமொரு சிறுவர் இல்லம் குறித்த இல்லத்திற்கு அருகில் நடாத்தப்படுவதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் குறித்த சபையின் கீழான இரு சிறுவர் இல்லம் கிளிநொச்சியில் நடாத்தப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த சிறுவர் இல்லங்களுக்கான அனுமதிகள் உரிய முறையில் பெறப்பட்டுள்ளனவா? அங்குள்ள சிறுவர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனரா? போன்ற விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# பொதுமக்களுக்கு முக்கிய அறிவித்தல்

பொலிஸ் ஊடகப் பிரிவைத் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்பட்டு நான்கு புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.


பத்தரமுல்லை, செத்சிறிபாய, இரண்டாம் கட்ட கட்டிடத்தின் 13 வது மாடியில் தற்போது பொலிஸ் ஊடகப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதால் தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இனிமேல் பின்வரும் புதிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**011 - 2887903, 011 - 2887906, 011 - 2887907, 011 - 2887973**

> வள்ளுவர் சமணத்தை பின்பற்றியிருக்கலாம் என்பது உண்மை. சமணர்கள் பிற்காலத்தில் சைவர்களாக மாறினர் என்பதும் ஏற்புடையது. ஆனால் எந்த ஒரு சமயம் பற்றியும் வள்ளுவர் தனது குறளில் குறிப்பிட்டுக் கூறவில்லை. இந்த நிலையில் தமிழ் நாடு மற்றும் ஈழத்தமிழர் பிரதேசங்களில் வாழும் இக்கால சமய அறிஞர்கள் சிலர் தத்தமது விருப்பங்கள் தேவைகளுக்கு ஏற்ப வள்ளுவருக்குச் சமய அடையாளமிடுகின்றனர்

# வள்ளுவரும் தமிழ்த்தேசிய அரசியல் விடுதலையும்!



**2009** மே மாதத்திற்குப் பின்னரான சூழலில், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய நியாயப்படுத்தலை மறுதலிக்கக்கூடிய அரசியல் உத்திகள் நுட்பமாக வகுக்கப்பட்டு மறைமுகமாகவும் நேரடியாகவும் மெது மெதுவாகச் செயற்படுத்தப்பட்டு வரும் பின்னணியில், தமிழ்த்தேசியச் சிந்தனையை மேலும் மடைமாற்றக்கூடிய முறையில் சமயக் கோட்பாடுகள் மிகைப்படுத்தப்படுகின்றன.

இந்த இடத்தில் ஈழத்தமிழ் அறிஞர்களான கா.பொ.இரத்தினம், தனிநாயகம் அடிகளார் போன்றோர் வள்ளுவம் ஊடாகத் தமிழினத்தை ஒன்றுபடுத்த மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய மீள் பார்வை அவசியமாகிறது.

'குறள் ஆய்வுச் செம்மல்' 'உலகத் தமிழர் செம்மல்' ஆகிய பல பட்டங்களைப் பெற்ற ஈழத்தமிழ் அறிஞர் கா.பொ. இரத்தினம், வள்ளுவரை சமயங்களுக்கு அப்பாற்பட்டவர் என்று வரைவு செய்திருக்கின்றார்.

கடவுளுடைய சித்தாத்தங்கள், முனிவர்களின் கூற்றுகள் என்று சொல்லப்படும் வாக்குகளை மறுப்பின்றி ஏற்க வேண்டும். அதனை ஆராய்ந்து விமர்சித்தால், அல்லது பொருத்தமற்றது என்று இகழ்ந்தால் நரகத்திற்குச் செல்வீர்கள் என்று மக்களை அச்சுறுத்துகின்ற மலினப்பட்ட தரமற்ற கருத்துக்களும் நூல்களும் வெளிவரும் இக் காலத்தில் 'உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிதல் வேண்டும் என்று வாதிட்டவர்தான் கா.பொ.இரத்தினம். குருட்டுத் தனமாக எதையும நம்புதல் கூடாது.

யார் கூற்றானாலும் ஆராயாமல் ஏற்றுக் கொள்ளப்படாது' என்ற கருத்துடையவர். தை மாதம் முதலாம் திகதிதான் வள்ளுவர் ஆண்டு என்று தமிழ் நாட்டின் முத்தமிழ் வித்தகர் கீ.ஆ.பொ.விஸ்வநாதம், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அமரர் கருணாநிதி ஆகியோர் கருத்திட்டபோது, அதனை மறுத்துரைத்து 'வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள், தமிழினத்தை ஒன்றுபடுத்தும் நாள்' என்று நியாயப்படுத்திய கா.பொ.இரத்தினம், ஈழத் தமிழறிஞர் அருட்தந்தை தனிநாயகம் அடிகளாருடன் இணைந்து 1952 இல் தமிழ் மறைக் கழகத்தை கொழும்பில் உருவாக்கினார்.

தமிழ் நாட்டின் முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் க.நமசிவாய முதலியார் நிறுவிய திருநாட் கழகம் 1935 ஆம் ஆண்டு மே மாதம் பதினெட்டு, பத்தொன்பதாம் திகதிகளில் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடியது. தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் இடம்பெற்றிருந்தாலும் பின்னர் அந்தக் கொண்டாட்ட முறைகள் செயலிழந்தன.

பல்வேறு வழிகளிலும் சிதறிக் கிடக்கும் தமிழர்கள், சமயங்களைக் கடந்து ஒருமித்த குரலில் ஒன்றிணைத்து வள்ளுவர் வழியில் வாழ வேண்டும் என்றும், அரசியல் உள்ளிட்ட பலதுறைகளிலும் ஒரே கருத்துடையவராக இருக்க வேண்டுமெனவும் நமசிவாய முதலியார் திருவள்ளுவர் நாள் கொண்டாட்டத்தில் நிகழ்த்திய உரையை, கா.பொ.இரத்தினம் 1952 இல் வெளியிட்ட 'திருவள்ளுவர் நாள் மலர்' என்ற நூலில் பதிவிட்டிருக்கிறார்.

வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள், தமிழினத்தை ஒன்றுபடுத்தும் நாள் என்ற க.பொ. இரத்தினத்தின் கோரிக்கையை குன்றக்குடி அடிகளார், டாக்டர். மா.இராசமாணிக்கனார்,



அ.நிகஸ்ன்




டாக்டர் மு.வரதராசன், அ.ச.ஞானசம்பந்தர், கி.வா. ஜெகன்நாதன் போன்ற பல்வேறு தமிழ் நாட்டுத் தமிழறிஞர்களும் அதனை ஏற்று வழிமொழிந்தனர். ஈழத்தமிழ் மெய்யியல் அறிஞர் பண்டிதமனி சி. கணபதிப்பிள்ளை ஆதரவு வெளியிட்டதை தமிழ் நாட்டு மற்றும் ஈழத்தமிழர் நாளிதழ்களும் பிரசுரித்திருந்தன. கா.பொ.இரத்தினத்தின் முயற்சியை குமுதம், ஆனந்தவிகடன் போன்ற சஞ்சிகைகளும் பாராட்டியிருந்தன.

வள்ளுவர் பொதுமறை என்ற தனிநாயகம் அடிகளாரின் வாதத்தை தமிழக சஞ்சிகைகள் முதன்மைப்படுத்தியிருந்தன. சென்னை மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயில் ஒன்று உள்ளது. 'இன்றும் அவ்விலுப்பை மரமும், அவர் தோன்றிய குடிலின் அடையாளமாக அம்மரத்தின் அருகே அவரது திருவுருவம் நிறுத்திய திருக்கோயில் ஒன்றும் திருமயிலையில் இருக்கின்றது' என்று மறைமலை அடிகளார் கூறுகிறார்.

இதனை அடியொற்றியதாகவே வைகாசி அனுடம் என்பதை 'திருவள்ளுவர் நாள் மலர்' என்ற நூல் விபரிக்கின்றது. 1837 இல் திருத்தணிகைச் சரவணப்பெருமாள் ஐயர் பதிப்பித்த திருக்குறள் பதிப்பில் இக்கோயிலைப் பற்றிய குறிப்புக் காணப்படுவதாக தேவப்பிரியராஜ் அக்ரிவேற்போட் (devapriyaji.activeboard.com) என்ற ஆய்வுத்தளம் கூறுகின்றது.

இருநூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மாவட்ட ஆட்சியாளராக இருந்த 'வைட் எல்லீஸ்' என்பவர் இந்தக் கோயிலைப் பற்றி விளக்கியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பு இத் திருக் கோயில் தோன்றியிருக்கலாம். என்பதும், சடாமுடியுடன் கூடிய சிதைந்த திருவுருவம் திருவள்ளுவருடையதுதான் என்றும் தொல்லியல் ஆய்வறிஞரான இராமச்சந்திரன் கூறுவதாகவும் இந்த ஆய்வுத் தளம் விபரிக்கிறது.

இத்திருவள்ளுவர் கோயிலில், திருவள்ளுவர் அவதார நாளாக வைகாசி அனுடமும் அவர் காலம் ஆகிய நாளாக மாசி உத்தரமும் கடைப்பிடிக்கின்றன. அதற்கான பூசைகள் நடைப்பெற்று வருவதாகவும் கூறப்பட்டிருக்கின்றன.

வைகாசி அனுடத்தை வள்ளுவர் கொண்டாடியதாகத் திருவள்ளுவரின் வீட்டில் இருந்த பழைய குறிப்புப் புத்தகம் ஒன்றில் இருந்து கண்டறியப்பட்டதாகவும், அதன் காரணமாகவே நமசிவாய முதலியாரும் அதன் பின்னர் வந்த கா.பொ.இரத்தினம் போன்றோரும் தமிழ் இனத்தை ஒன்றுபடுத்தும் நோக்கில் 'வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்' என்று பிரகடணப்படுத்திக் கொண்டாடியிருக்கின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

பிரான்சிஸ் வைட் எல்லீஸ் என்பவரே திருக்குறளை முதன் முதலில் அச்சுவடிவில் பதிப்பித்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தார். சித்த மருத்துவர் அயோத்திதாசனின் பாட்டனார் பட்லர் கந்தப்பன், எல்லீஸிடம் அந்த ஓலைச் சுவடிகளைக் கையளித்திருக்கிறார்.

அதன் பின்னர் பொலிடன் (Bodleian) என்ற நூலகத்தில் வைத்து ஜீ.யூ போப் என்ற தத்துவப்போதகர் சுவாமிகள் பாதுகாக்கிறார். பிற்காலததில்; பேராசிரியார் மருதநாயகம், எல்லீஸின் கையெழுத்துப் பிரதிகளில் உள்ள தகவல்களை மேலும் விரிவாக ஆரய்ந்து எல்லீஸின் திருக்குறள் விளக்கக் கையெழுத்துப் பிரதி (The Ellis Mamuscript) என்ற நூலிலாக வெளியிட்டுள்ளார்.

திருக்குறள் பற்றிய எல்லீஸின் ஆங்கில மொழிபெயர்ப்பு 1812 அல்லது 1819 இல் வெளிவந்திருக்க வேண்டும். அது பற்றிய சரியான தகவல்கள் இல்லை. லன்டன் அருங்காட்சி நூலகத்தில் இருந்த தமிழ் நூல்களுக்கான அட்டவனைகளை 1909 இல் ஜீயூ போப் உருவாக்கியதன் மூலம் அது பற்றிய தகவல்களை அறிய முடிகின்றது.

எல்லீஸ் பற்றிய தகவல்களை வெளியிட்ட சென்னைப் பல்கலைக்கழகம் பல தகவல்களை மூடி மறைததிருப்பதாக தமிழ் நாடு தகவல் திரட்டு என்ற நூலில் தமிழ்த்தேசியர் கவலை வெளியிட்டுள்ளார்.

முந்நூற்று நான்கு குறளுக்கு உரை எழுதும்போது முந்நூற்றுக்கும் அதிகமான நூல்களில் இருந்து விளக்கவுரைகளை எல்லீஸ் மேற்கோள் காட்டியுள்ளார் என்றும் அவற்றில் அறுபத்து மூன்று தமிழ் நூல்கள் எனவும் தமிழ்த்தேசியர் விபரிக்கிறார்.


பரிமேலழகர் ஓலையில் எழுதியிருந்த விளக்கவுரையையும் எல்லீஸ் வாசித்திருக்கிறார். நச்சினார்க்கினியர் கூட மொழிசார்ந்த எண்பது நூல்களை மாத்திரமே வாசித்து குறளுக்கு விளக்கவுரை எழுதியுள்ள நிலையில், ஆங்கிலேயரான எல்லீஸ் முந்நூறு நூல்களை வாசித்து விளக்கம் எழுதியிருக்கிறார் என்றால், அவரின் தமிழ்மொழி பற்றின் ஆழத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ் - தமிழ் மொழி ஒன்றைத்தவிர திராவிடம் என்ற இனக்குழுமம் இருப்பதாக எல்லீஸ் எங்கும் காண்பிக்கவில்லை என தமிழ்த் தகவல் திரட்டில் தமிழ்த்தேசியர் கூறுகிறார்.

பிராமணிய ஆதிக்கம் பற்றிய தகவல்களும் எல்லீஸின் கருத்தில் கசிந்திருந்ததால், பார்ப்பானிய சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை

08 ஆம் பக்கத்தில் மிகுதி ...

# வள்ளுவரும் தமிழ்த்தேசிய அரசியல் விடுதலையும்!



தமிழ்மறைக் கழக ஆட்சி மன்ற உறுப்பினர்—1955.

இருப்போர் (இடமிருந்து வலம்) :—கு. பூர்ணனந்தன், பி. ஏ., சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், ஆசிரியர் இ. சி. சோதிநாதன் (செயலாளர்), பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். (தலைவர்), பண்டிதர் மு. ஆறுமுகன் (பொருளாளர்), வித்துவான் சீ. மே. வே. வேதநாயகம், பண்டிதர் க. முருகேசு.

நிற்போர் :—கா. ப. பாலசந்திரன், இ. இரத்தினம் பி. ஏ., சி. க. நடராசா, வித்துவான் ச. சபாபதி, ஆசிரியர் கு. வி. செல்லத்துரை.

உப வேந்தராகக் கொண்ட சென்னைப் பல்கலைக்கழகம் எல்லீஸ் தமிழுக்கு ஆற்றிய பணிகள் பற்றிய விபரங்களை மூடி மறைத்திருக்க வேண்டும் என்றும் தமிழ்த்தேசியர் வெளிப்படுத்துகிறார்.

1796 இல் எல்லீஸ் கிழக்கிந்திய கம்பனியின் ஊழியராக சென்னை நகரத்துக்கு வருவதற்கு முன்னர் 1794 இல் கின்டர்ஸ்லே என்பவரால் எழுதிவெளியிடப்பட்ட ஸ்பேசிமன்ற் ஒப் கின்டோ லிற்றர்ஜர் (Specimens of Hindoo Literature) எனும் நூலில் திருவள்ளுவர் பெயர் இடம்பெற்றுள்ளது. சில குறள்களுக்கு ஆங்கில விளக்கமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திருக்குறளுக்கு முழுமையான உரையினை எழுதி முடிப்பதற்கு முன்னரே எல்லீஸ் 1819 இல் காலமாகிவிட்டார். எல்லீஸ் சேகரித்த பல ஓலைகளும் அவர் எழுதிய பல கட்டுரைகளும் அவருடைய சமையல்காரரின் கவனக்குறைவால் தீயில் கருகி முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவே வால்டர் எலியட் என்ற ஆய்வாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதாவது Entirely lost and Destroyed என்று அவர் ஆங்கிலத்தில் கூறுகிறார். எல்லீஸ் எழுதிய கட்டுரைகளின் பிரகாரம் வள்ளுவரை சமண சயமத்தவர் என்பதையும் அறியமுடியும்.

தோமஸ் துரைரெட்ணம் என்ற ஆய்வாளர் ஆங்கிலத்தில் வெளியிட்ட (Languages and Nations & Conversations in Colonial South India) என்ற நூல் திராவிடம் பற்றிய ஆய்வாக இருந்தாலும், வள்ளுவர் மற்றும் எல்லீஸ் பற்றிய தகவல்களும் காணப்படுகின்றன.

திராவிடம் என்ற இனக்குழுமம் இல்லை என்ற எல்லீஸின் கருத்தை இந் நூல் மறுக்கும் தொனி ஆங்கில மொழியில் புரிகிறது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில்தான் முதன் முதலில் பரிமேலழகர் ஓலை மூலம் உரை எழுதியிருக்கிறார். ஓலையில் எழுதப்பட்ட பரிமேலழகர் உரைகளை அக்கால மடங்களும் ஆதினங்களும் பாதுகாத்திருந்தன.


அதன் பின்னர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலேதான் எல்லீஸ் சென்னை நகரின் ஆட்சியாளராக இருந்தபோது இந்த ஓலைச் சுவடிகளைப் பெற்று ஆங்கிலத்தில் அச்சிட்டிருக்கிறார்.

கி.பி. பதின்நான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வடிவமைக்கப்பட்டிருந்த வள்ளுவர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டதாக தமிழ்நாடு அரச தொல்லியல் துறை ஆய்வாளர் சா.கிருஷ்ணமூர்த்தி 1950 களில் குறிப்பிட்டிருந்தார். பதின்நான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வெளியான தமிழ் இலக்கியப் படைப்புகள் பலவற்றில் சைவ சமயக் கருத்துக்கள் இருந்தன.

ஆனால் திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் அதே காலகட்டத்தில்தான் ʼகுந்தக் குந்தர்ʼ என்னும் சமண முனிவர் வாழ்ந்ததாகக் கூறப்படுவதாலும், தங்கக் காசு ஒன்றில் வள்ளுவர் உருவம் பொறிக்கப்பட்ட முறை பற்றி எல்லீஸ் கூறிய தகவல்களையும் மையமாகக் கொண்டே வள்ளுவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்று பிற்காலத்தில் விவாதிக்கப்படுகின்றது. ஆகவே வள்ளுவர் ஒரு சமயத்தைப் பின்பற்றியிருக்கலாம் என்பது உண்மை. சமணர்கள் பிற்காலத்தில் சைவர்களாக மாறினர் என்பதும் ஏற்புடையது.

ஆனால் எந்த ஒரு சமயம் பற்றியும் வள்ளுவர் தனது குறளில் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆனால் தமிழ் நாடு மற்றும் ஈழத்தமிழர் பிரதேசங்களில் வாழும் இக்கால சமய அறிஞர்கள் சிலர் தத்தமது விருப்பங்கள் தேவைகளுக்கு ஏற்ப வள்ளுவருக்குச் சமய அடையாளமிடுகின்றனர்.

அரசியல், ஆட்சிமுறை அதற்கான சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், நிர்வாகம் மற்றும் மனித வாழ்வின் மகத்துவங்கள் பற்றியெல்லாம் குறள் இனமத வேறுபாடுகள் இன்றி உலகத்துக்குப் போதித்திருக்கிறது.



உலகில் பலதுறைகளுக்குமான மெய்யியலை (Philosophy) குறள் படைத்திருக்கிறது. சங்ககாலத்திலும் சங்கமருவிய காலத்திலும் எழுந்த தமிழ் இலக்கியங்கள் வள்ளுவரின் நீதிக் கருத்துக்களுக்களை மையப்படுத்தியிருக்கின்றன. ஆனால் எந்த ஒரு இலக்கியப் படைப்புகளும் சமய அடையாளங்களை வள்ளுவருக்குக் கொடுக்கவில்லை.

சைவ சமயம் ஊடாக வள்ளுவரைப் பார்க்கவுமில்லை. இப் பின்புலத்தில் கா.பொ. இரத்தினம் முன்வைத்த ʼவைகாசி அனுடம் திருவள்ளுவர் நாள்ʼ என்ற பிரகடணம் தமிழ் நாடு, இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா மாத்திரமன்றி, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் தொடச்சியாகக் கொண்டாடப்பட்டிருக்கிறன. இதற்கான சான்றுகளைக் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆண்டறிக்கைகளில் காணலாம். கா.பொ.இரத்தினம் 1958-1959 ஆம் ஆண்டுகளில் சங்கத்தின் தலைவராகப் பணிபுரிந்தார்.

கலைஞர் கருணாநிதி, R.B.பொ.விஸ்வநாதம் ஆகியோர் தை மாதம் முதலாம் திகதி அதாவது தைப்பொங்கலை தமிழர் திருநாள் என்று நியாபப்படுத்தி அன்றைய தினம் வள்ளுவர் நாளைக் கொண்டாட வேண்டுமெனக் கருத்திட்டமைக்கு, கா.பொ.இரத்தினம் பகிரங்கமாக வெளியிட்ட எதிர்க் கருத்துக்களை தேவப்பிரியராஜ் அக்ரிவேற்போட் என்ற தமிழ் ஆய்வுத் தளம் நியாயப்படுத்தியுள்ளது.

மதம் சாராதது என்பதால் தைப்பொங்கலை 'தமிழர் திருநாள்'என்ற பெயரில் முன்வைத்தார்கள் என்று ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அந்த நாள் தமிழர்களுக்கு மட்டுமே உரியதல்ல.

இமாச்சல - உத்தர பிரதேசப் பகுதிகளில் 'லோஹ்ரி', வங்கத்தில் 'கங்கா சாகர் மேளா', பஞ்சாபில் 'மகி', தெலுங்கு - கன்னட நிலங்களில் 'மகர சங்கிராந்தி'என்றெல்லாம் கொண்டாடப்படும் தை முதலாம் திகதியை, எப்படி தமிழருக்கே மட்டும் தனித்துவமான ஒரு நாள் என்று சொல்லமுடியும் என்ற கேள்வியை அந்த ஆய்வுத்தளம் எழுப்பியிருக்கிறது.

இதனால் ஈழத்தமிழ் அறிஞரான கா.பொ. இரத்தினம் பாராட்டுக்குரியவர். அவர் பரிந்துரைத்த ʼவைகாசி அனுடம் திருவள்ளுவர் நாள்ʼ என்பதை உலகம் எங்கும் நிலைநிறுத்த வேண்டுமென 2018 யூலை மாதம் வெளியிட்ட அந்த ஆய்வில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

கா.பொ.இரத்தினம் உலகத் திருக்குறள் மன்றத் தலைவராகப் பதவி வகித்திருந்தபோது கொழும்புத் தமிழ்ச் சங்கம் 2000 ஆம் ஆண்டு திருக்குறள் மாநாட்டை நடத்தியிருந்தது.

மாநாட்டு மலருக்கு ஆசிச் செய்தி வங்கிய இராமகிருஷ்ண மிசன் வெள்ளவத்தைக் கிளையின் தலைவர் சுவாமி ஆத்மகணாநந்தஜீ ʼமக்கள் சமயங்களை வெறும் தத்துவங்களாகவும் சடங்குகளாகவும் மாத்திரமே கடைப்பித்து வருகின்றனர். இதனால் சமயங்களோடு இணக்கப்பாட்டைக் காண முடியாது வேற்றுமை உணர்வுகளிலேயே மக்கள் மூழ்கியுள்ளனர்.

ஆகவே அமைதியற்ற நிலைமை தோன்றியுள்ளது'என்று கவலை வெளியிட்டிருந்தார். குறள் சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்ட நீதி நூல் என்று தங்கம்மா அப்பாக்குட்டி எழுதிய 'திருக்குறள் காட்டும் நல்வாழ்வு' என்ற தலைப்பில் மலரில் எழுதிய கட்டுரையில் விபரித்திருக்கிறார்.

ஆகவே ஈழத்தமிழ் அறிஞர்கள் பலரின் வள்ளுவர் பற்றிய பார்வையும், 2009 மே மாதத்திற்குப் பின்னரான அரசியல் சூழலில் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை, வள்ளுவரின் அரசியல் அறம் பற்றிய மெய்யியல் முறைமைகளுக்கு ஏற்ப எப்படி நிறுவலாம் என்பது குறித்தும் சிந்திக்க வேண்டிய காலகட்டமிது.

அரசறிவியல் பற்றிய மேலைத்தேயக் கோட்பாடுகளை விடவும் திருக்குறள், அரசு - சமூகம் மற்றும் சட்டம் - நீதி, பொருளியல் போன்ற துறைசார்ந்த விவகாரங்களை நுட்பமாகக் கையாளக் கூடிய மெய்யியல் வழிகளைத் தந்துள்ளது.

இப்பின்புலத்தில், ஈழத் தமிழர் பிரதேசங்களில் சமய அடையாளங்கள் அதுவும் சைவ சமய அடையாளங்கள், தமிழ் இலக்கிய வரலாறுகள் - சான்றுகள், பண்பாடுகள், தமிழர் மரபுரிமைகள் பேணப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் வள்ளுரை ஒரு சமயத்துக்குள் வரையறுப்பது, எழுபது வருடங்களுக்கும் மேலான தமிழ்தேசிய அரசியல் போராட்டத்துக்கும், கா.பொ.இரத்தினம், தனிநாயகம் அடிகளார் போன்ற ஈழத்தமிழ் அறிஞர்களின் சிந்தனைகளுக்கும் இழைக்கப்படும் பெரும் அநீதி.

'வள்ளுவம் ஒரு உலகப் பொதுமறை' என்ற கருத்தியல் நீக்கத்துக்கான உந்துதலாகவும் இதனை நோக்க வேண்டும். பௌத்த தேசிய திணிப்பை எதிர்ப்பதற்காக மோடியின் இந்துத்துவக் கொள்கைக்குப் பின்னால் செல்வது அல்லது நம்புவது பட்டறிவற்ற புத்தி.

> வள்ளுரை ஒரு சமயத்துக்குள் வரையறுப்பது, எழுபது வருடங்களுக்கும் மேலான தமிழ்தேசிய அரசியல் போராட்டத்துக்கும், கா.பொ.இரத்தினம், தனிநாயகம் அடிகளார் போன்ற ஈழத்தமிழ் அறிஞர்களின் சிந்தனைகளுக்கும் இழைக்கப்படும் பெரும் அநீதி. வள்ளுவம் ஒரு உலகப் பொதுமறை என்ற கருத்தியல் நீக்கத்துக்கான உந்துதலாகவும் இதனை நோக்க வேண்டும். பௌத்த தேசிய திணிப்பை எதிர்ப்பதற்காக மோடியின் இந்துத்துவக் கொள்கைக்குப் பின்னால் செல்வது அல்லது நம்புவது பட்டறிவற்ற புத்தி.

# ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணியில்








# சிங்கள பௌத்த மயமாக்கல்

**வெ**டுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டமைக்கு எதிராக வவுனியாவில் திரண்ட மக்களோடு ஒப்பிடுகையில் நாவற் குழியில் புத்த விகாரையின் கலசத்தைத் திறப்பதற்காக பஸ்களில் வந்து இறங்கிய சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகமானது என ஓர் ஊடகவியலாளர் சென்னார்.

ஒரு சிவனாலயம் சிதைக்கப்பட்டமை தமிழ் மக்களை ஒன்று திரட்டியுள்ளது என்பது உண்மை. ஆனால் அந்தத் திரட்சியைப் பேரெழுச்சியாக மாற்றத் தமிழ் கட்சிகளால் முடியவில்லை என்பதும் உண்மை. வெடுக்குநாறி மலை ஆலைய நிர்வாகத்தை சேர்ந்தவர்கள் அவசரமாக விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து வவுனியாவில் மக்கள் திரண்டார்கள்.

கட்சிப் பிரமுகர்கள், கட்சி ஆதரவாளர்கள், சிவில் சமூகத்தவர்கள், பொதுமக்கள், இந்து மத நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என்று பலதரப்பட்டவர்களும் அங்கே காணப்பட்டார்கள்.

கால அவகாசமெடுத்து, திட்டமிட்டுத் திரட்டப்பட்ட கூட்டம் அதுவல்ல.எனவே ஒப்பீட்டளவில் சனத்தொகை குறைவு தான். எனினும், அண்மை நாட்களாக நடந்துவரும் ஊர்வலங்களோடு ஒப்பிடுகையில், எதிர்ப்பு நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் வவுனியாவில் திரண்ட மக்களின் தொகை அதிகமானது.



அண்மை நாட்களாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மரபுரிமை ஆக்கிரமிப்பு மற்றும் நிலப்பறிப்புக்கு எதிராக ஆங்காங்கே சிறிய அளவில் எதிர்ப்புகளைக் காட்டி வருகிறது.

ஆளுநரின் அலுவலகத்துக்கு முன்,நெடுந்தீவில் என்று சொல்லி ஆங்காங்கே அக்கட்சியின் பிரமுகர்களும் ஆதரவாளர்களுமாக மொத்தம் 50க்கும் கூடாத தொகையினர் திரண்டு தமது எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள். இதுபோன்ற விடயங்களில் முதலில் எதிர்ப்பைக் காட்டுவதும் உடனடியாக எதிர்ப்பைக் காட்டுவதும் அக்கட்சிதான்.

ஆனால் அந்த எதிர்ப்பை ஏனைய கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளோடு இணைந்து பெருந்திரளான ஓர் எதிர்ப்பாக ஒழுங்கமைக்க அக்கட்சி விரும்பவில்லை என்றே தெரிகிறது.

இது போன்ற போராட்டங்களை முதலில் முன்னெடுப்பது தாங்களே என்று காட்டி அதன்மூலம் தமது கட்சிக்கான ஆதரவுத் தளத்தை பெருக்கிக் கொள்வதே அவர்களுடைய நோக்கமாகக் காணப்படுகிறது.

மாறாக நில அபகரிப்பு, மரபுரிமை அபகரிப்பு என்பவற்றிற்கு எதிராக தமிழ் மக்களை ஒரு பெரும் திரளாகத் திரட்டுவதற்கு அக்கட்சி விரும்பவில்லை. தவிர அவ்வாறு ஒரு பெருந்திரளைக் கூட்ட அவர்களால் மட்டும் முடியாது.அதற்கு ஏனைய கட்சிகளையும் சிவில் அமைப்புகளையும் ஒன்றிணைக்க வேண்டும்.

மேற்கண்ட போராட்டங்கள் யாவும் முன்னெடுக்கப்பட்டு வரும் காலகட்டம் ஜெனிவா கூட்டத் தொடருக்குரியது. முன்னய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் அண்மை ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடரை நோக்கிச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

பக்க நிகழ்வுகளுக்கு வழங்கப்படும் நிதியும் குறைந்துள்ளதாக தெரிகிறது. ஜெனிவா கூட்டத் தொடர் தமிழ் மக்களுக்கு முக்கியமானது அல்ல என்ற அபிப்பிராயம் ஒப்பீட்டளவில் அதிகரித்து வருகிறது.

இம்முறை ஜெனிவாக் கூட்டத் தொடரைப்பற்றி அதிகம் பேசியது ஜெனிவாவை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு தமிழ் அமைப்பின் பிரதிநிதியாகிய ஒரு பெண் தான். அவரைத் தவிர ஜெனிவாக் கூட்டத் தொடரைக் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் ஆர்வம் குறைவாகவே காணப்பட்டது. இத்தனைக்கும் ஐநா மனித உரிமைகள் அமைப்பானது சான்றுகளையும் சாட்சிகளையும் திரட்டுவதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறது.

10 ஆம் பக்கத்தில் மிகுதி ...



நிலாந்தன்

> வள்ளுவரை ஒரு சமயத்துக்குள் வரையறுப்பது, எழுபது வருடங்களுக்கும் மேலான தமிழ்தேசிய அரசியல் போராட்டத்துக்கும், கா.பொ.இரத்தினம், தனிநாயகம் அடிகளார் போன்ற ஈழத்தமிழ் அறிஞர்களின் சிந்தனைகளுக்கும் இழைக்கப்படும் பெரும் அநீதி. வள்ளுவம் ஒரு உலகப் பொதுமறை என்ற கருத்தியல் நீக்கத்துக்கான உந்துதலாகவும் இதனை நோக்க வேண்டும். பௌத்த தேசிய திணிப்பை எதிர்ப்பதற்காக மோடியின் இந்துத்துவக் கொள்கைக்குப் பின்னால் செல்வது அல்லது நம்புவது பட்டறிவற்ற புத்தி.

> இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக அவர்கள் இதைப் பார்க்கவில்லையா? பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாகப் பயன்படுத்தி பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அவற்றின் நலன்களைப் பேணும் நிதி முகவர் அமைப்புகளும் இலங்கைத் தீவை எப்படித் தமது கடன் பொறிக்குள் வீழ்த்தலாம் என்று சிந்திப்பதாகவே தோன்றுகிறது.

## ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணியில்

# சிங்கள பௌத்த மயமாக்கல்

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் ஐநாவை நோக்கிய எதிர்பார்ப்பு முன்னுரைவிடக் குறைந்து விட்டது. இம்முறை ஐநா கூட்டத்தொடரானது ஏப்ரல் நான்காம் திகதியுடன் முடிவடைகின்றது.

கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில்தான் வெடுக்கு நாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டிருக்கிறது. கிண்ணியா வென்னீரூற்று, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, குருந்தூர் மலை. போன்ற இடங்களை தொல்லியல்

திணைக்களம் கையாளும் விதம் தொடர்பாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.



அதுபோலவே கச்சதீவில் வைக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பான சர்ச்சைகளும் எழுந்துள்ளன. அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத் தொடரைக் குறித்து அலட்டிக் கொள்ளுமாக இருந்தால் கூட்டத்தொடர் நிகழும் காலகட்டத்திலேயே இவ்வாறான மரபுரிமை ஆக்கிரமிப்புகளை தொடர்வதற்கு அனுமதித்திருக்காது. அதிலும் குறிப்பாக அரசாங்கத்தின் இரண்டு முக்கிய அமைச்சர்கள் தென்னாபிரிக்காவில் ஒரு முக்கியமான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த காலகட்டமும் இது.

தென்னாபிரிக்காவின் நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாக அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், அந்நாட்டில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுக்களைப் போன்ற கட்டமைப்புகளை இலங்கைத் தீவில் உருவாக்கும் நோக்கத்தோடும் வெளியுறவு அமைச்சரும் நீதி அமைச்சரும் தென்னாபிரிக்காவுக்குச் சென்றார்கள்.

அவர்கள் அவ்வாறு தென்னாபிரிக்காவில் நின்றிருந்த காலகட்டத்தில்தான் மேற்கண்ட மரபுரிமை ஆக்கிரமிப்புகள் தொடர்பான சர்ச்சைகள் மேலெழுந்தன.

மேலும் ஐ எம் எஃப்பின் உதவிகள் கிடைக்கத் தொடங்கிய ஒரு பின்னணிக்குள்தான் மேற்படி மரபுரிமை ஆக்கிரமிப்புக்கள் நிகழ்ந்தன.

அப்படியென்றால், ஐநா கூட்டத்தொடர், ஐ. எம். எப் உதவி, தென்னாபிரிக்காவின் நல்லிணக்க அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல். போன்ற செயற்பாடுகளை ஒருபுறம் முன்னெடுத்துக் கொண்டு, இன்னொருபுறம் மரபுரிமை ஆக்கிரமிப்புகளை அரசாங்கம் முடுக்கி விட்டுள்ளதா என்ற கேள்வி எழும்.

அவ்வாறு வலிமையாக முன்வைக்கப்பட்டு இருந்திருந்தால் ஐஎம்எப்பின் உதவி கிடைக்கும் ஒரு காலகட்டத்திலேயே மேற்கண்டவாறு அரசாங்கம் செயற்பட்டிருக்குமா?

பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணை எடுக்க முற்படும் ஐ எம் எஃப், உலக வங்கி, மேற்கு நாடுகள், இந்தியா, மற்றும் சீனா போன்றன பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாக பயன்படுத்துகின்றன என்றே தோன்றுகின்றது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக அவர்கள் இதைப் பார்க்கவில்லையா? பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாகப் பயன்படுத்தி பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அவற்றின் நலன்களைப் பேணும் நிதி முகவர் அமைப்புகளும் இலங்கைத் தீவை எப்படித் தமது கடன் பொறிக்குள் வீழ்த்தலாம் என்று சிந்திப்பதாகவே தோன்றுகிறது.



ஐ. எம். எப்பின் உதவிகள் உறுதி செய்யப்படுவதற்கு முன்னதாக இலங்கைத் தீவை நோக்கி நிகழ்ந்த அமெரிக்க மற்றும் இந்தியப் பிரதிநிதிகளின் வருகையும் அதைத்தான் உணர்த்துகின்றன.

2009க்குப் பின் இலங்கைத்தீவு ஒப்பீட்டளவில் வெளியுலகத்திடம் அதிகம் தங்கியிருந்த ஒரு காலகட்டமாக கடந்த ஆண்டையும் இந்த ஆண்டையும் குறிப்பிடலாம்.

இவ்வாறு வெளியுலக உதவிகளில் தங்கியிருந்த ஒரு சிறிய நாட்டை எப்படித் தங்களுடைய பிடிக்குள் கொண்டு வரலாம் என்றுதான் எல்லாப் பேரரசுகளும் சிந்திக்கின்றன. இதில் தமிழ் மக்களின் விவகாரம் ஒரு முன்நிபந்தனையாக முன்வைக்கப்படவில்லையா என்ற கேள்வி எழுகிறது.

அவ்வாறு முன்வைக்கப்பட்டிருந்திருந்தால் அரசாங்கம் படையினரை ஆட்குறைப்பது பற்றியும், உயர் பாதுகாப்பு வலையங்களைக் குறைப்பது பற்றியும் திட்டவட்டமான முடிவுகளை எடுத்திருக்கும். ஆனால் அவ்வாறான முடிவுகளை எடுக்கத் தேவையான மக்கள் ஆணை ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை என்று மேற்கு நாடுகளும் நம்புவதாகத் தெரிகிறது.

ஐ எம் எஃப், உலக வங்கி போன்றவற்றிடம் உதவி கேட்டுப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த ஒரு பின்னணியில், அரசாங்கம் தமிழ்த் தரப்புடன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களில் ஈடுபடுவதாக ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப முயற்சித்தது.

ஆனால் தமிழ்த் தரப்பு விரும்பியோ விரும்பாமலோ புத்திசாலித்தனமாக முடிவெடுத்து அரசாங்கத்தின் பொறிக்குள் விழவில்லை. அதன்பின் இப்பொழுது தென் ஆப்பிரிக்காவின் நல்லிணக்கப் பொறிமுறையைப் பின்பற்றி உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஓர் ஆணைக் குழுவை உருவாக்குவதற்கு அரசாங்கம் எத்தனிப்பதாகத் தெரிகிறது.

தென்னாபிரிக்கக் கள நிலவரமும் இலங்கைத் தீவின் களநிலவரவும் ஒன்றல்ல. தென்னாபிரிக்காவில் நீதிக்காகப் போராடிய கறுப்பின மக்களுக்கு அரசியல் நீதி கிடைத்து விட்டது. பொருளாதார நீதிதான் முழுமையாகக் கிடைக்கவில்லை.

கறுப்பின மக்களுக்கு அரசியல் ரீதியாக விடுதலை கிடைத்து விட்டது. எனவே அங்கே ஒரு நிலை மாற்றம் உண்டு. அந்தப் பின்னணிக்குள் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை அங்கே முன்னெடுப்பது ஒப்பீட்டளவில் பொருத்தமானது.

ஆனால் இலங்கைத் தீவின் அனுபவம் அத்தகையது அல்ல. இலங்கைத் தீவில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால் அரசின் உபகரணங்களான திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து முன்னெடுக்கின்றன. அதாவது இன ஒடுக்குமுறை வேறுவடிவங்களில் முன்னெடுக்கப்படுகிறது.

எனவே இலங்கைத்தீவில் நிலை மாற்றம் ஏற்படவில்லை. அதனால் நிலைமாறு கால நீதியைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமற்றது. ஏற்கனவே 2015 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க ஆட்சிக்கு வந்த பின் முன்னெடுக்கப்பட்ட நிலைமாறு கால நீதி செயற்பாடுகள் தோல்வியுற்று விட்டன என்று அச்செயற்பாடுகளில் பங்காளியாக இருந்த சுமந்திரன் வவுனியாவில் வைத்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தெரிவித்திருந்தார்.

தமிழ்க் கட்சிகளை ஜெனிவாவை நோக்கி ஒருங்கிணைக்கும் ஒரு முயற்சியின் போது நடந்த சந்திப்பு அது.

அதுதான் உண்மையும். நிலைமாறுகால நீதி எனப்படுவது இலங்கையில் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தியது.

2015இல் இருந்து 2018 வரையிலுமான நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளின் விளைவாகத்தான் ராஜபக்சக்கள் மூன்றில் இரண்டு தனிச் சிங்களப் பெரும்பான்மையை நோக்கி உழைக்கத் தொடங்கினார்கள். இவ்வாறான தோல்விகரமான ஒரு முன் அனுபவத்தின் பின்னணியில், மீண்டும் தென்னாபிரிக்க முன்மாதிரியைப் பின்பற்றப் போவதாகக் கூறுவதை எப்படி விளங்கிக் கொள்வது?

ஐ எம் எஃப், உலக வங்கி போன்ற மேற்கத்திய நிதி முகவர் அமைப்புகளிடம் கடனுக்காகத் தங்கியிருக்கும் ஒரு நாடு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிய பெயரில் மீண்டும் புதுப்பிக்க முற்படும் ஒரு நாடு, ஐநா கூட்டத் தொடரின் பின்னணியிலும், இரண்டு முக்கிய அமைச்சர்களின் தென்னாபிரிக்கப் பயணத்தின் பின்னணியிலும், ஐ எம். எஃபின் உதவிகள் கிடைக்கத் தொடங்கிய ஒரு காலகட்டத்திலும், மரபுரிமை ஆக்கிரமிப்புக்களை நிறுத்தவில்லை என்று சொன்னால் அது எதைக் காட்டுகின்றது?

அரசாங்கத்தைப் பிணையெடுக்கும் முயற்சிகளும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாதபடி பிணைக்கப்படவில்லை என்பதையா?



# இந்துத்துவா சார்புநிலை தமிழ் தேசியத்தை சிதைக்குமா?

அறிவுசார் சமூகத்தின் பிரதிநிதிகள், அரசியல் தரப்புக்கள் - எவரேனும், திருகோணமலையில் பகிரங்க கூட்டங்களை நடத்தும்துணிவு கொண்டால் அதில் பேசுவதற்கு நான் தயராகவே இருக்கின்றேன்.வடக்கு கிழக்கில் எவர் அழைத்தாலும் உரையாற்ற தயார்.

நமது அரசியல் சூழலில், இந்துத்துவா தொடர்பில் பேசுகின்ற விவாதிக்கின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது.இந்துத்துவா என்பது, தற்போது இந்தியாவை ஆட்சி செய்யும் பாரதிய ஜனதா கட்சியினால் முன்னிலைப்படுத்தப்படும் தேசியவாத கருத்தியலாகும்.

இது ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஸ்தாபகர் சேவகரால் முன்வைக்கப்பட்டது. இந்துவாக இருப்பது என்பதுதான் இதன் உள்ளடக்கமாகும்.ஈழத் தமிழ் அரசியல் சூழலை பொறுத்தவரையில், இது ஒரு அண்மைக் காலப் போக்காகும்.

குறிப்பாக, இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சி பலமான நிலையில் ஆட்சியை கைப்பற்றியதை தொடர்ந்தே, இவ்வாறானதொரு போக்கு ஈழத் தமிழ் அரசியல் சூழலில் துளிர் விட்டது.

இப்போது அது ஓரளவு வளர்ந்திருக்கின்றது. அதற்கு நன்றாக தன்ணீருற்றி வளர்க்க வேண்டும் - அதில் தவறில்லையென்று ஒரு சாராரும், இல்லை அது ஆபத்தானதென்று இன்னொரு சாராரும் அடிக்கடி முட்டுப்படுவதை காண முடிகின்றது.

இந்துத்துவா சார்பு நிலையானது, தமிழ் தேசிய அரசியலை சிதைத்து விடுமென்பதே, அதனை எதிர்ப்பவர்களின் வாதமாக இருக்கின்றது.

இந்த விடயத்தில் தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் மத்தியில் பெரியளவில் குழப்பங்கள் இருப்பதாக தெரியவில்லை.அவர்கள் இந்த விடயத்தில் அபிப்பிராயங்களும் கூற முற்படுவதில்லை.ஆனால் கருத்துருவாக்கிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் என்போர் மத்தியில்தான், இந்த விடயம் அவ்வப்போது விவாதிக்கப்படுகின்றது.

அதே போன்று புலம்பெயர் சூழலிலுள்ள சிலரும் இத்துத்துவா சார்புநிலையை எடுப்பதன் ஊடாக புதுடில்லியை அணுகலாமென்று எண்ணுவதாக தெரிகின்றது.

இதற்கு சமாந்திரமாக, உண்மையில் இன்னும் பலமாக இந்துத்துவா அரசியலை கையாள வேண்டுமென்னும் முனைப்பு சிங்கள ஆளும் தரப்பிடமும் காணப்படுகின்றது.இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட இந்த விடயத்தில் பிரத்தியேகமாக செயற்பட்டு வருகின்றார்.

மொறகொட, ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத்தை சந்தித்து கலந்துரையாடுகின்றார்.பி.ஜே.பிக்கு நெருக்கமான சிந்தனைக் கூடமான விவேகானந்தா சர்வதேச நிலையத்துடன் நெருங்கிய தொடர்பை பேணிவருகின்றார்.

இந்தியாவின் தற்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவால் குறித்த சிந்தனைக் கூடத்தின் பணிப்பாளராக



இருந்தவராவார்.இதற்கப்பால், ஆர்.எஸ்.எஸ் பிரமுகர்களுடன் தொடர்புகளை பேணுவதை ஒரு ராஜதந்திர பணியாவே மொறகொட மேற்கொண்டு வருகின்றார்.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அரசியல் கட்சிதான் பி.ஜே.பி என்பது இரகசியமான ஒன்றல்ல.இந்தியாவின் ஆட்சி இந்துத்துவா சக்திகளின் கையிலிருக்க வேண்டுமென்பதற்காகவே, ஆஸ்.எஸ்.எஸ், பாரதிய ஜனதா கட்சியை உருவாக்கியது.

ஆஸ்.எஸ்.எஸ் அமைப்பு தொடர்பிலும் பிரதமர் நரேந்திர மோடி தொடர்பிலும் பலவாறான விமர்சனங்கள் உண்டு.அண்மையில், அமெரிக்காவின் செல்வாக்குமிக்க பணக்காரரும், திறந்த சமூகத்திற்கான நிதியமென்னும் அமைப்பின் இயக்குனருமான ஜோர்ஜ் சோரஸ், நரேந்திர மோடி தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

அதே போன்று, நரேந்திர மோடி, குஜராத்தின் முதலமைச்சராக இருந்த போது, முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில், அண்மையில் பி.பி.சி ஊடகம், ஆவணப்படமொன்றை வெளியிட்டிருந்தது. அதில் நரேந்திர மோடி, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் தொடர்புபட்டதாக கூறப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து பி.பி.சிக்கு எதிராக இந்தியளவில் கண்டனங்களும், எதிர்ப்புக்களும் வெளியிடப்பட்டன.

இவைகள் அனைத்தும் பி.ஜே.பியின் தேர்தல் வெற்றியை பலவீனப்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதாகவே பி.ஜே.பி வட்டாரங்கள் கருதுகின்றன.ஒப்பீட்டடிப்படையில் பி.ஜே.பி பலமாக இருப்பதாகவே நோக்கப்படுகின்றது. முன்னர் எப்போதுமில்லாதளவிற்கு இந்துத்துவா சக்திகள் இந்தியாவில் எழுச்சியடைந்திருக்கின்றன.

இந்த எழுச்சியின் விளைவே பி.ஜே.பியின் அபார வெற்றியாகும். பி.ஜே.பியின் வெற்றிக்கு மோடி கவர்ச்சியே பிரதான காரணமாகும். இதன் காரணமாகவே, மோடியின் மீது, பிரத்தியேகமாக விமர்சனங்கள் முன்வைப்படுகின்றன. மோடியின் செல்வாக்கை, நன்மதிப்பை பலவீனப்படுத்துவதன் ஊடாக, ஆளும் பி.ஜே.பியை பலவீனப்படுத்தலாமென்று எண்ணுவதற்கு வாய்ப்புண்டென்று ஒருவர் வாதிட்டால் அதனை மறுப்பது கடினம் தான்.

இவ்வாறானதொரு பின்னணியில் தான், இத்துத்துவா சார்பு நிலையெடுப்பதன் ஊடாக, பலமான நிலையிலிருக்கும் பி.ஜே.பியை நெருங்கலாமென்றும், அதன் மூலம் ஈழத் தமிழ் மக்கள் நன்மையை பெறலாமென்றும் ஒரு பார்வை, ஈழத் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் துளிர்விட்டது.

தமிழ் நாட்டு ஆதரவாளர்களோடு மட்டும் நிற்காமல் புதுடில்லியிலும் புதிய ஆதரவாளர்களை தேட வேண்டுமென்னும் போக்கொன்று உருவாகியது.

ஈழத் தமிழர் அரசியலை பொறுத்தவரையில் பாரம்பரியமாக தமிழ் நாட்டோடு மட்டுமே அரசியல்ரீதியான தொடர்புகள் பேணப்பட்டிருந்தன. இன்றும் இதுதான் பிரதான போக்காக இருக்கின்றது.

தமிழ் நாடு இல்லாமல் புதுடில்லியை அணுக முடியாதென்பதே இதுவரையில் இருந்துவந்த பார்வையாகும். ஆனால் பி.ஜே.பியின் எழுச்சி இந்தப் பார்வையில் உடைவை ஏற்படுத்தியிருக்கின்றது.

வழமைபோல், தமிழ் நாட்டோடு மட்டும் நின்றால் எமது அணுகுமுறையும்



யதீந்திரா

வழமைபோல் தமிழ் நாட்டோடு மட்டும் சுருங்கிவிடும்.ஆனால் இந்துத்வா சார்பு நிலையில் சிந்தித்தால் எமது அணுமுறை இந்தியா முழுமைக்குமானதாக இருக்கும் இதன் மூலம், புதுடில்லியை இலகுவாக அணுகலாம் இந்தியாவில் பரந்தளவிலான தொடர்பை பேணலாம். இவ்வாறானதொரு பார்வை ஒரு சாராரால் வலுவாக முன்வைப்படுகின்றது. இதனை இன்னொருசாரார் எதிர்க்கின்றனர்.

ஈழத் தமிழர் தேசியமென்பது மதச்சார்பற்றதாகும். எனவே இத்துத்துவாவை நோக்கி வளைந்தால் தமிழ் தேசியம் சிதைந்துவிடுமென்பதே அவர்களின் வாதமாக இருக்கின்றது. இந்த விடயங்களை அரசியல்ரீதியில் எவ்வாறு நோக்குவது? உண்மையில் இது அடிப்படையில் 2009 இற்கு பின்னரான அரசியலின் விளைவாகும்.

2009 வரையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூலம் ஒரு தனிநாட்டை அடைய முடியுமெனும் பார்வையே தமிழ் பெரும்பாண்மையை ஆக்கிரமித்திருந்தது.



12 ஆம் பக்கத்தில் மிகுதி ...

> ஈழத் தமிழர் அரசியலை பொறுத்தவரையில் பாரம்பரியமாக தமிழ் நாட்டோடு மட்டுமே அரசியல்ரீதியான தொடர்புகள் பேணப்பட்டிருந்தன. இன்றும் இதுதான் பிரதான போக்காக இருக்கின்றது. தமிழ் நாடு இல்லாமல் புதுடில்லியை அனுக முடியாதென்பதே இதுவரையில் இருந்துவந்த பார்வையாகும். ஆனால் பி.ஜே.பியின் எழுச்சி இந்தப் பார்வையில் உடைவை ஏற்படுத்தியிருக்கின்றது.



# இந்துத்துவா சார்புநிலை தமிழ் தேசியத்தை சிதைக்குமா?

அந்த நம்பிக்கை தோல்வியடைந்த போது அடுத்தது என்ன என்னும் கேள்விக்கு பதிலளிக்கக் கூடிய நிலையில் ஈழத்திலும் புலத்திலும் எந்தவொரு கட்சியும், அமைப்பும் இருக்கவில்லை.

2009 வரையில் ஒன்றாக பயணித்த அமைப்புக்கள் மத்தியில் பிளவுகளும் முரண்பாடுகள் தீவிரமடைந்தன.

ஈழத்திலும் அதுவே நடந்தது. ஆரம்பத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இணைந்திருந்தவர்கள், 2009இற்கு பின்னரான கடந்த 13 வருடங்களில் பல கட்சிகளாக பிளவடைந்திருக்கின்றனர்.

தமிழ் தேசியத்தின் பெயரால் அவர்களை ஒன்றுபடுத்த முடியவில்லை. தமிழ் தேசியத்தின் பெயரால் அவர்களை ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்க முடியவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால் கடந்த பதின்மூன்று வருடகாலத்தில் தமிழ் தேசியம் தொடர்ந்தும் சிதைந்து கொண்டுதான் சென்றிருக்கின்றது.

தமிழ் தேசிய அரசியலுக்கு வெளியிலிருந்தவர்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட தமிழ் தரப்பால் அரசின் ஆதரவாளர்களென்றும் தமிழ்த் தேசிய விரோதிகளென்றும் வர்ணிக்கப்படுவர்கள் தேர்தல்களில் வெற்றிபெறுகின்றனர்.

தமிழ் தேசியத்தின் பெயரால், அவ்வாறானவர்களை மக்கள் மத்தியிலிருந்து அகற்ற முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் நோக்கினால் இந்துத்துவா சார்புநிலையால் தமிழ் தேசியம் சிதைந்துவிடுமென்று வாதிடுவதானது மிகவும் பலவீனமான வாதமாகவே இருக்கின்றது.

தமிழ் தேசிய அரசியல் மதச்சார்பற்றதென்று வாதிடுவதில் உண்மையிருந்தாலும் கூட அதனை ஒரு பலமான வாதமாக முன்வைப்பதற்கான நியாயங்கள் தமிழர் பக்கத்திலில்லை.

இந்துத்துவா சார்புநிலையை கைக்கொள்ளுவதால் தமிழர்களுக்கு என்ன கிடைக்குமென்று கேள்வியெழுப்ப முடியுமென்றால் மதச்சார்பற்ற தேசியத்தால் தமிழர்களுக்கு எதைப் பெற்றுக்கொடுக்க முடிந்ததென்னும் கேள்விக்கும் எவரிடமும் பதிலில்லையே!

இந்துத்துவா சார்புநிலையை நியாயப்படுத்துவர்கள் இவ்வாறு கேட்கின்றனர். இந்த





வாதத்தை கேள்விக்குள்ளாக்கக் கூடிய நிலையில், ஏனையவர்கள் இல்லை.

ஏனெனில், விடுதலைப் புலிகள் இல்லாத கடந்த 13 வருடங்களில், தமிழ் மக்களுக்கு சரியான பாதையை எவராலும் காண்பிக்க முடியவில்லை. இந்த வழிமுறை மட்டுமே சரியானதென்று கூறக் கூடிய எந்தவொரு கட்சியும் மக்கள் மத்தியில் எழுச்சியடையவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், ஒவ்வொருவரும் தங்களுக்கு சரியானதென்று கருதும் ஒன்றை கைக்கொள்ள முற்படுகின்றனர்.

தாங்கள் நம்பும் ஒன்றை பரிசோதித்து பார்க்க முற்படுகின்றனர். இந்த இடத்தில் தான் இந்துத்துவா சார்புநிலையென்பதும் ஒரு வழிமுறையாக நோக்கப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்? விடுதலைப் புலிகளின் தோல்வி தமிழ் தேசிய அரசியல் மீது சில கேள்விகளை முன்வைத்தது. பலருக்கும் பலவாறான கேள்விகளிருந்தாலும் கூட அனைத்து வகையான கேள்விகளும் விடுதலைப் புலிகளின் தோல்வியிலேயே தரித்து நின்றது.

ஏன் இவ்வாறானதொரு தோல்வியேற்பட்டது? மூன்று தசாப்தகாலமாக நிலைபெற்றிருந்த ஒரு இயக்கமானது, எவ்வாறு மூன்றே வருடங்களில் அழிக்கப்பட்டது? ஏன் இதனை தடுத்துநிறுத்த முடியவில்லை? மிக அருகில் தமிழ் நாட்டில் இத்தனை கோடி தமிழ் மக்கள் இருந்தனர்.

மேற்குலக நாடுகளில் பத்துலட்சத்திற்கு மேற்பட்ட புலம்பெயர் தமிழ் மக்கள் இருந்தனர். இத்தனையிருந்தும், முள்ளிவாய்க்கால் அழிவை தடுத்துநிறுத்த முடியவில்லையே! ஏன்?

இந்தக் கேள்விகள் அனைத்திற்குமான பதிலாக இருந்தது, விடுதலைப் புலிகளுக்கு தற்பாதுகாப்பு நிலை ஆதரவு வழங்குவதற்கு ஒரு நாடு இருந்திருக்கவில்லை.

அப்படியொரு நாடு இருந்திருக்குமென்றால் அது இந்தியா மட்டுமே. விடுதலைப் புலிகளின் சில வரலாற்று தவறுகளால் இந்தியாவின் ஆதரவை முற்றிலுமாக இழந்து போயினர்.இந்தியாவின் தவிர்க்க முடியாத இடம் தொடர்பான பார்வையில் பலரும் உடன்பட்டனர்.

பிராந்திய அரசியல் பின்புலத்தில், இந்தியாவின்றி ஈழத் தமிழர் அரசியல் வாழ்வில் அணுவும் அசையாதென்னும் பார்வையை எவராலும் நிராகரிக்க முடியாமல் இருந்தது விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கூட பிராந்திய அரசியல் யதார்த்தத்தை நம்மால் நிராகரிக்க முடியாதென்னும் பார்வையில் அனைவருமே உடன்பட்டனர்.

இந்த இடத்தில் எழுந்த அடுத்த கேள்வி, இந்தியாவின் இடம் தவிர்க்க முடியாததென்றால், எவ்வாறு இந்தியாவுடனான உறவை பலப்படுத்துவது?

இதற்கான பாரம்பரிய பதில் தமிழ் நாட்டு ஆதரவு சக்திகளுடன் இணைந்து பணியாற்றுவதன் ஊடாக புதுடில்லியை தமிழர்களுக்கு சாதமாக திருப்புவது.

ஆனால் இந்த அணுகுமுறையால் தமிழர்கள் எதையும் அடைய முடியவில்லை. முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து, மக்களை பாதுகாக்க தமிழ் நாட்டால் எதனையும் செய்ய முடியவில்லையயே - பின்னர் எதற்காக தோல்வியடைந்த வழிமுறையை தொடர்ந்தும் கைக்கொள்ள வேண்டும்? இவ்வாறான கேள்விகளுக்கான பதிலாக முன்வைக்கப்பட்டதுதான், இந்துத்துவா சார்புநிலையாகும்.

அதாவது, ஆளும் பி.ஜே.பிக்கு நெருக்கமாகுவதன் மூலம் இந்தியாவின் வெளிவிவகார அணுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தலாமென்னும் வாதமொன்று மேலோங்கியது.

இந்த வாதத்தை முன்வைப்பவர்கள் கூறும் பிறிதொரு விடயம், தமிழ் நாட்டோடு நின்றால், இந்தியாவுடனான எங்களுடைய உறவு, தென்னிந்தியாவுடன் மட்டுப்பட்டுவிடும், ஆனால் இந்;துத்துவா சார்புநிலையை கைக்கொண்டால், இந்தியா முழுவதும் தொடர்புகளை ஏற்படுத்தலாம்.

நமக்கு எது தேவை? தென்னிந்தியாவுடன் மட்டும் நிற்பதா அல்லது, முழு இந்தியாவுடனும் உறவாடுவதற்கான வாய்ப்புக்களை தேடுவதா? பரந்தளவிலான வாய்ப்புக்களை தேட வேண்டுமாயின், நாமும் பரந்தளவில் தான் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு கூறுபவர்கள், இந்துத்துவா சார்புநிலையை வந்தடைந்திருக்கின்றனர். இந்துத்துவா சார்புநிலை தமிழர்களுக்கு கைகொடுக்குமா? இதற்கு உடனடியாகவே - இல்லையென்றோ அல்லது ஆம் என்றோ பதிலளித்துவிட முடியாது.

ஆனால் சில விடயங்களை கையாண்டு பார்ப்பதில் தவறில்லை. ஏனெனில் ஏற்கனவே பல்வேறு விடயங்களை கையாண்டு தமிழர்கள் தோற்றுப் போயிருக்கின்றனர்.

ஒவ்வொரு தோல்வியும் சில அனுபவங்களை தந்திருக்கின்றது. ஆனால் பி.ஜே.பி ஆட்சியிலிருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்துத்துவா என்பது இந்தியாவில் சக்தி வாய்ந்த ஒன்றாகத்தான் இருக்கப்போகின்றது.

> விடுதலைப் புலிகள் இல்லாத கடந்த 13 வருடங்களில், தமிழ் மக்களுக்கு சரியான பாதையை எவராலும் காண்பிக்க முடியவில்லை. இந்த வழிமுறை மட்டுமே சரியானதென்று கூறக் கூடிய எந்தவொரு கட்சியும் மக்கள் மத்தியில் எழுச்சியடையவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், ஒவ்வொருவரும் தங்களுக்கு சரியானதென்று கருதும் ஒன்றை கைக்கொள்ள முற்படுகின்றனர்.



# பாரம்பரிய முறையிலான தேன் சேகரிப்பு



நா.சாருமதி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஆரோக்கியமிக்க உணவு வகைகளில் ஒன்றாக குறிப்பிடப்படுவது தேனாகும். பாரம்பரியமான ஒரு தொழிலாக பார்க்கப்படும் தேன் எடுத்தல் முந்தைய காலத்தில் மக்களின் பண்பாடு வாழ்வியலை அடையாளம் காட்டுகின்ற ஒரு மரபார்ந்த தொழிலாக காணப்பட்டது.


மீன்பிடி தேன் சேகரிப்பு விவசாயம் கால்நடை வளர்ப்பு என மரபு ரீதியாக பல்வேறு தொழில்கள் காணப்பட்டு வருகின்றன. தேன் எல்லா காலத்திலும் மருந்து உணவுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய ஆரோக்கியமான உணவு வகையாக எப்போதும் கேள்விக்கு உரிய ஒன்றாக இருந்து வருகின்றது. தேனை காட்டில் மரங்களிலும் பாரம்பரிய முறையில் எடுப்பதோடு தற்காலத்தில் தேனீ வளர்ப்பின் ஊடாகவும் பெற்று வருகின்றனர். இருப்பினும் பாரம்பரிய முறையில் தேன் எடுத்தல் நெடுங்மீ;கணி கிராம மக்களுக்கு பிரசித்தமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

முந்தைய தலைமுறையினர் தமது உணவு தேவையை பூர்த்தி செய்து கொள்ள வேட்டையாடியும் மீன்பிடித்தும் காடுகளில் காய்கறி தேன் கிழங்கு போன்றவற்றைத் தேடியும் தனது உணவுத் தேவையை பூர்த்தி செய்து வாழ்ந்தனர். அந்தக் காலத்தில் தேன் முக்கிய உணவுப் பொருளாக இருந்து வந்தது. அதனை சேமிப்புப் பண்டமாகவும் வைத்திருந்தனர். அதன் தொடர்ச்சியே இன்றும் கிராமங்களில் வாழ்பவர்கள் காடுகளில் தேன் எடுக்கும் முறையைக் கையாள்வதோடு தேன் சேகரிப்பில் ஈடுபட்டும் வருகின்றனர்;.



தேன் சேகரிப்பவர்களிடம் எவ்வாறு தேனை கண்டறிகிறீர்கள் என்று கேட்டபோது தேன் எடுப்பதற்காக உரிய ஆயத்தங்களுடனும் பாதுகாப்புடனும் செல்வோம். காட்டில் பொருத்தமான மரங்களில் தேன் இருப்பது தேனடை மணமூடாக அறிய முடியும் அதை வைத்து இடத்தை இனங்காண முடியும். பின்பு தேன் எடுக்கும் வழிமுறைகளை கையாண்டு தேன் சேகரிப்பில் ஈடுபடுவோம் என்கின்றனர். இது அவர்களின் மரபார்ந்த அறிவியலைக் காட்டுகின்றது.

தேய்பிறை நாட்களில் மட்டுமே தேன் சேகரிப்பது வழக்கம் தேன் எடுப்பதில் ஆண்கள் மட்டுமே ஆர்வம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. தேனுடன் மெழுகும் எடுத்து வருவதன்மூலம் நீண்ட நாள் அவற்றைச் சேமித்து வைக்கவும் முடிகின்றது. தேன் சேகரிப்பது பொழுதுபோக்காகவும் நேர்த்தியாக தொழிலாகவும் இக் கிராம மக்கள் மேற்கொண்டு வருகின்றதாக கூறுகின்றனர்.



பொதுவாக மரங்கள் பொந்துக்களில் தேன்கள் கூடு கட்டி இருக்கும் உயரமான மரங்களில் இருந்து தேன் எடுக்கும் போது அது அதீத மருத்துவ குணம் வாய்ந்ததாக காணப்படுவதால் அவற்றை மருந்து தேவைக்கு பயன்படுத்துவது வழக்கம். ஏனையவை உணவுத் தேவைக்காக கேட்போருக்கு நாங்கள் கொடுத்து விடுவோம் மருத்துவத் தேவைக்காக பயன்படுத்தப்படும் தேன்கள் விலை அதிகமாகவே காணப்படுகின்றன.

தேனில் புற்றுத்தேன் கொம்புத்தேன் கொழுகுத்தேன் மலைத்தேன் மரத்தேன் என பலவகைகள் காணப்படுகின்றன. தேனின் மணம் அது சேகரிக்கும் பூவின் மணத்தை பொறுத்தமையும். அந்த வகையில் தேன்கள் பலவகை பூக்களில் கொண்டு வேறுபடுததப்படுகின்றன. பாலம்பூ முரளிப்பூ நாவற்பூ இலுப்பைப் பூபோன்ற பூவகைகள்காணப்பட்டாலும் பாலை முரளி போன்ற பூக்களிலேயே அதிக அளவு தேன்கள் உருவாக்கப்படுகின்றன.



விருந்திலும் மருந்திலும் முக்கியத்துவம் பெறுகின்ற தேன் தேனீக்கள் பூக்களில் உள்ள குளுக்கோஸை உறிஞ்சி அவற்றை தமது உடலில் ஒருவித திரவமாக்கி மலைகளிலும் கொம்புகளிலும் மரங்களிலும் கூடு அமைப்பில் கட்டுகின்றன. 200 கிராம் தேனில் ஒன்றரை லிட்டர் பால் ஒன்றரை கிலோகிராம் மாமிச சத்துக்கள் காணப்படுவதாக கூறப்படுகின்றது. சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் மருத்துவத்திற்காகவும் உணவுக்காகவும் இந்த தேனை உபயோகிக்க முடியும். தேன் சாப்பிடுதல் மூலம் இரத்தத்தை சுத்திகரிப்பதோடு குடல் புண் இருமல் இதய நோய் அஜீரணப் பிரச்சனை போன்ற நோய்கள் குணமாகவும் வாய்ப்பளிக்கிறது.





சுத்தமான தேனை இனங்காண்பது எப்படி என்று கேட்டபோது இயற்கையாக தேன்கள் தடிப்பாகவே காணப்படும். ஆனால் கலப்படம் செய்யப்பட்ட தேன்கள் தேனுடன் சீனிப்பாகு கலப்பதால் நீரில் இலகுவாக கரையக் கூடியதாக காணப்படுகின்றன. நல்ல தேன் அடர் மஞ்சள் நிறம் மற்றும் வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இது ஒவ்வொரு பூவை பொறுத்தே அமைகின்றது. அனுபவம் குறைவான மக்கள் தேனை இனங்காண்பது கடினமாக இருக்கின்றது. இதனால் கலப்படமான தேன்களை கண்டு ஏமாறுகின்ற தன்மையை காணமுடிகின்றது.

தேன் சேகரிப்பவர்களிடம் வருமான நிலை பற்றி கேட்டபோது விவசாயமே அவர்களுடைய பிரதான தொழிலாக இருப்பதாகவும் தமது பாரம்பரிய தொழிலை விட்டால் மருவிச்சென்றுவிடும் என்பதனால் கிடைக்கின்ற நேரத்தில் தேன் சேகரிப்பதற்கு செல்வதாகவும் கூறுகின்றனர்.

தேன் விற்பனைத் தன்மை பற்றிக் கேட்கும்போது உள்ளூர் மக்களைக் காட்டிலும் அதிகமான வெளிநாட்டவர்கள் தேனை



விரும்பி வாங்குவதாகவும் வெளியூர் ஏற்றுமதிக்காக கொடுப்பதாகவும் தெரிவிப்பதோடு கிட்டத்தட்ட 1000 முதல் 2000 வரையிலான விலைகளில் தேன்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

மிகவும் ஆபத்தான தொழிலாக இருந்தாலும் கூட இந்த தொழிலை தாங்கள் செய்யாது விட்டால் அடுத்த சந்ததியினருக்கு இதன் முக்கியத்துவம் தெரியாது போய்விடும் என்று தெரிவிக்கின்றனர்.




ஈழத்தில் நிகழ்ந்த இனவழிப்புப் போரின் பின்புலத்தில் அங்கே பணியாற்றிய மருத்துவரின் கதையினூடாகொ இடம்பெற்ற அவலங்களின் முக்கிய நிகழ்வுகளை வெளிக்கொண்டு வரும் பொய்யா விளக்கு திரைப்படம் இணையத்தினூடாக பார்வையிடலாம்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

பதினைந்துக்கு மேற்பட்ட சர்வதேச விருதுகளை திரைப்பட விழாக்களில் வென்று ஈழத்திரைப்படங்களின் தரத்தினை பிறிதொரு தளத்துக்கு எடுத்துச் சென்ற இந்தத் திரைப்படம் எங்கள் மக்களின் கதைகளை சர்வதேச பரப்பில் எடுத்துச் செல்ல வேண்டுமென்ற வெண்சங்கு கலைக்கூடத்தின் ஆர்வத்தினைத் திருப்தி செய்வதாக இருக்கிறது. இந்த முயற்சியினை வெற்றிகரமாக ஆக்குதல் எம் மக்களின் பொறுப்பாகும்.

ஒரு கொடூரப் போர் வீழ்த்திச் சென்ற எங்கள் மக்களின் வாழ்க்கையில் ஆயிரமாயிரம் தியாகங்களும் அவலங்களும் இன்னமும் இரத்தம் காயாத நினைவுகளோடு இருக்கின்றன. இவை சொல்லப் படல் வேண்டும். இந்தப் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தலைமுறை இருக்கும் போதே அந்தக் கதைகள் திரிபு படுத்தப்படாமல் உலகமெங்கும் எடுத்துச் செல்லப்படல் வேண்டும். பொய்யா விளக்கு என்ற இந்தத் திரைப்படம் இந்த நோக்கத்திற்கான ஒரு காத்திரமான முதற்படி. இதனையும் வரவேற்காது பின் நிற்போமானால் எமது கதைகளை எடுத்து வருகின்ற இப்படியான முயற்சிகள் இல்லாமலேயே போய்விடும்.

தட்டிக்கழிக்காமல் நாம் கைகொடுக்க வேண்டிய ஒரு முக்கியமான படைப்பு இது. எமது வருங்கால சந்ததிக்கும் தமிழரல்லாதோருக்கும் கற்பித்தலுக்கான ஒரு மூலமாக இது இருக்கிறது.

இலங்கை ஈழமண்ணில் யுத்த இறுதி நாட்களில் நடைபெற்றவை போர்க் குற்றங்களே என வலுவான ஆதாரமாக




இருப்பவைகளில் மிக முக்கியமானது சேனல் 4 வெளியிட்ட காணொலிக் காட்சிகள் பிறகு நேரில் கண்ட சாட்சியங்கள்.

பொதுவாகொ ஹேக் ஒப்பந்தம் ஜெனிவா ஒப்பந்தம் ரோம் சட்டம் ஆகியவற்றின்படி இனப்படுகொலை மற்றும்





போர்க்குற்றங்கள் என்று என்னென்ன குற்றச் செயல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ அவற்றைவிடப் பல மடங்கு குற்றங்கள் ஈழமண்ணின் யுத்த இறுதிக் காலங்களில் இலங்கை இராணுவம் மற்றும் அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் மிக முக்கியமானது இறுதி நேரத்தில் அரசு மருத்துவர்களை அங்கிருந்து வெளியேறச் சொன்னது. பொது மக்களின் கூடாரங்கள் பதுங்கு குழிகள் மீதெல்லாம் செல்லடித் தாக்குதல் நடத்தப்பட்டு அதில் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கும் அப்பாவி மக்களுக்கு மருத்துவ உதவி கிடைக்கக் கூடாது என்பதற்காக இலங்கை அரசு இவ்வாறு உத்தரவிட்டது.

ஈழத்தில் நிகழ்ந்த இன அழிப்புப் போரின் பின்புலத்தில் பணியாற்றிய மருத்துவரின் கதையினூடாக இடம் பெற்ற அவலங்களின் முக்கிய நிகழ்வுகளை வெளிக்கொண்டு வரும் பொய்யா விளக்கு திரைப்படம் இணையத்தினூடாக மக்களுக்கு எடுத்து வரப்படுகிறது.

எங்க மக்களுக்கு இந்த நேரத்தில் மருத்துவ உதவி தராவிட்டால் என்னைக் கடவுள்கூட மன்னிக்க மாட்டார். என்று கூறி மக்களோடு மக்களாக நின்று இறுதிவரை மருத்துவ உதவிகள் செய்த அரசு மருத்துவரான வரதராஜா அவர்களின் சாட்சியக் காட்சி ஆவணமாக இத்திரைப்படம் மிக




நேர்த்தியாக எடுக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்து மண்ணின் இறுதி நாள் வலியை உணர்ந்த ஒருவரின் திரை ஆவணப் படைப்பு என்றால் அதில் என்ன சொல்ல வேண்டும் என்ன சொல்ல அவசியம் இல்லை என்பதில் தெளிவு இருக்கும் என்பதற்கான நல்ல எடுத்துக் காட்டு இப்படம். அதேபோலொ கொஞ்சம் கூட மிகைப்படுத்தல்கள் இல்லாமல் அலட்டல் நடிப்பு இல்லாமல் இயல்பான வகையில் தரமான ஒளிப்பதிவு படத்தொகுப்பு கதைப் பாத்திரங்கள் இசை எனக் கவனித்துக் கோர்க்கப்பட்டிருக்கிறது இத்திரைப்படம்.

ஒரு அரசு மருத்துவராக இருந்தபோதும் இலங்கை இராணுவத்தால் அவர் நடத்தப்பட்ட விதம் ஒரு நொடியில் உயிர் பிழைத்த நிகழ்வு ஆகியவற்றைக் காணும் போது உயிர்க்கொலை தவிர்க்கொ பிறருக்குத் துன்பமிழைக்காமல் அன்பு செய் என்று சொன்ன புத்தரின் பௌத்த மண்ணிலா இப்படி ஒரு உலகமகா அநீதி குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன? எனும் கேள்வி துளைத்தெடுக்கிறது.

நாளை பத்திரிகையாளர் சந்திப்பு. நாங்க சொல்லிக் கொடுத்ததை அப்படியே சொல்லனும். இல்லை என்றால் உன் குடும்பமும் இருக்காது நீயும் இருக்க மாட்டாய் என இராணுவ அலுவலர் மிரட்டி பத்திரிகையாளர் சந்திப்பில் யுத்த வலயப் பகுதியினுள் ஒரு அப்பாவிகூட உயிரிழக்கலை என்று மருத்துவர் வரதராஜாவை சொல்ல வைக்கிறார்.

மனசாட்சிக்கு விரோதமாக இவ்வாறு கூறிவிட்டதும் துப்பாக்கி ஒலிகளும் மரண ஓலங்களும் வரதராஜா அமெரிக்கா சென்று குடியேறிய பின்பும் உறக்கத்தைக் கலைக்கும் கொடூரக் கனவுகளாக ஒவ்வொரு இரவும் மாறிவிட்டதால் உளவியல் சிக்கலுக்கு ஆளாகிறார் வரதராஜா. சிகிச்சையும் எடுத்துக் கொள்கிறார்.

கடந்த காலங்களில் இருந்து மீளமுடியாத யுத்த இறுதிக் காலத்தின் வாழும் சாட்சியமாக இருந்து தானும் தமது மனைவி குழந்தையையும் நடிக்க வைத்து இத்திரைப்படத்திலும் அதை ஆவணப்படுத்தியிருக்கிறார் டாக்டர்.வரதன். இப்படி உதவிய தமக்கு இலங்கை இராணுவம் துன்பளித்தொ அதேவேளை குடிக்க நீர் கொடுத்த நிலையில் மறுபுறம் குடிக்க சிறிது தண்ணீர் கூடத் தராத சக ஈழத் தமிழர் ஒருவர் பற்றியும் ஒரு காட்சி இடம்பெற்றிருக்கும்.

போரை முறியடிக்கிறோம் என உலக அரங்கில் இலங்கை அரசு அறிவித்து விட்டு தமிழர் பகுதிக்கு குடிநீர் உணவு மருந்து மருத்துவ உதவிகள் ஆகிய அனைத்தையும் துண்டித்துவிட்டு அப்பாவி மக்கள் மீது கொத்துக் குண்டுகளை வீசிக் கொன்ற நிகழ்வு கண்முன்னே காட்சிகளாக இத்திரைப்படத்தில் விரிகின்றன.

படத்தின் ஒரு வசனம் 90 நிமிடப் படத்தின் ஹைலைட். இப்போதும் காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

டாக்டர் வரதராஜா - ஒரு நாள் எல்லா உண்மைகளையும் இந்த உலகத்துக்குச் சொல்லுவேன்.அவரது மனைவி - எல்லா உண்மைகளும் எல்லோருக்கும் தெரியும் என்பது. ஆம் எல்லாருக்கும் தெரிந்தே இனப்படுகொலையும் போர்க் குற்றமும் ஈழ மண்ணில் அரங்கேறியி

